5

மணி

அனு 4

4/5th MAY 1944



JL

...னின் ஓரான் துறைமுகத்தை அடைந்த
...ரான்ஸ் 'ஸைச் சேர்ந்த முதல் கப்பல்

ஜெ11/1132 R.M
M44.11.S
210091

அடுத்த நிமிஷம் இந்த கைகள் எப்படி இருக்கும்?

—குழந்தை 'அழுக்கு அபாய'த்திலிருந்து காப்பாற்றப் படுவது ஒரு வரம் போன்றது!

ஒரு நிமிஷம் களிமண்ணால் நாணயங்கள் செய்வதும், மறு நிமிஷம் தரையில் கடை வைத்து விளையாடுவதுமாக இருப்பதால் அவள் கையிலிருக்கும் அழுக்கு எப்படிப் பட்டதென்றும் அதில் என்னென்ன கிருமிகள் இருக்குமென்றும் சொல்ல முடியாது. ஆனால் தவறாமல் லைப்பாய் சோப்பால் சுத்தம் செய்துக் கொள்வதால் அவள் தன்னைக் காப்பாற்றிக் கொள்கிறாள்.

அவளுடைய பெற்றோர்கள் லைப்பாய்தான் குடும்பத்தை ஆரோக்கியமாகவும், சுகமாகவும், இருக்கச் செய்கிறதென்று சொல்லுவார்கள். அவர்களுக்கு அழுக்கில் வெகு பயங்கரமான கிருமிகள் இருக்கின்றன வென்றும், அவை எவ்வளவு சுலபமாக நோய் உண்டாக்கி அதைப் பரவச் செய்யும் என்றும் தெரியும். தவறாமல் அடிக்கடி விஷக்கிருமி நாசன சோப்பான லைப்பாயால் சுத்தம் செய்தால் அது குழந்தைகளை இந்த அபாயத்தினின்றும் காப்பாற்றும். ஆரோக்யத்தைப் பாதுகாக்கக்கூடிய ஒரு அதிசய குணம் இந்த சோப்பிற்கு உண்டு. இந்தியாவில் மற்றெந்த சோப்புக்கும் இக் குணம் இல்லை.

லைப்பாய் நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது அதுஒருநல்லவழக்கம்

L, 50-50 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED



மாத வெளியீடு

ஆசிரியர் : காரியாலயம் :

கா. சி. வேங்கடரமணி — 34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை

வருட சந்தா ரூபா 3 — தனிப்பிரதி அணா 4

மாலை 11 | **MAY 1944** : தாரண ௵ வைகாசி ௴ | முத்து 5

பொருளடக்கம்

	விஷயம்		பக்கம்
1.	சம தரிசனமும் தீர்க்க தரிசனமும்	... பி. ஸ்ரீ.	... 153
	நமது ஸ்டர்லிங் கடன்	... எம். என். ரங்காச்சாரி, எம். ஏ., எம். எல்.	... 156
3.	அர்ச்சுனன் ரதம்	... கா. கி. நாகராஜன், பி. எஸ்ஸி. (ஆனர்ஸ்)	... 159
4.	ஸம்ஸ்கிருத கீர்த்தனைகள்	... ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.	... 162
5.	ஜீவகாருண்ய யோகம்	... டி. எஸ். ராமாநுஜம், எம். ஏ., எம். எல். பி. (லண்டன்)	164
6.	சீடாவின் தியாகம்	... பாசரசு	... 174
7.	போகிற போக்கில்	... மணி	... 177
8.	முடவன் முழுக்கு	... திவான்பகதூர் - கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி	... 181
9.	அஜீர்ணம்	... திருஷ்ட கர்மா	... 183

"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

க்ளூகோனேட்-D.

கால்ஸியம் க்ளூகோனேட் மாத்திரைகள் -

விடமின் D சேர்ந்தது

*

உட்கொள்ளக் கூடிய சாக்லட் - வடிவில்

கர்ப்ப காலத்தில் கால்ஸியம் குறைவு, பலஹீனம், குழந்தைகளுக்கு எலும்பு ஏற்படுவது போன்ற எல்லா சந்தர்ப்பங்களுக்கும் சிபார்சு செய்யப்படுவது

*

I. T. L. தயாரிப்பு

கவர்ன்மெண்ட் இண்டஸ்டிரியல் & டெஸ்டிங் லாபரடரி

மல்லேச்வரம் P. O. :: பெங்களூர்

சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள் :—

மெஸர்ஸ் : **பெஸ்ட் & கம்பெனி லிமிடெட்.**

தபாற் பெட்டி நே. 63, — மதராஸ்.

தொடர்பு வைத்துக்
கொள்ள வேண்டிய
கம்பெனி.

ஹிந்துஸ்தான்

கோவாபரேடிவ் இன்ஷ்யூரன்ஸ் ஸோஸைடி
லிமிடெட்

மன்னன் மகுடத்தினும் சிறப்புடைய கிரீடத்துடன்
விளங்கும்

நற்பெயரே கிரீடமாக விளங்குகிறது

முன்னேற்றத்தின் நிலை

1942வருடத்தில் புதிய பாலிஸிகள்	....ரூ.	288,05,001
அமுலிலுள்ள மொத்த வியாபாரம்	....ரூ.	19,36,75,434
ஆயுள் அஷ்யூரன்ஸ் நிதி	....ரூ.	4,72,89,810
மொத்த ஐவேஜிகள்	....ரூ.	5,18,19,442

இதுவரை பிரதிநிதிகளில்லாத இடங்களில்

ஏஜண்டுகள் தேவை

விபரங்களுக்கு எழுதவும் :—

மதராஸ் பிராஞ்சு :

"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"

107, அரண்மனைக்காரத் தெரு.

ஜி. டி. மதராஸ்.

எல்லாம் நீங்களே

உங்களை அண்டியிருப்பவர்கள் ஒவ்வொருவரும் உங்களை ஒரு தெய்வமாக நினைத்துக் கொண்டாடி வருகிறார்கள். அதற்குத் தகுந்தபடி அபிமானமும், தியாகமும் செய்கிறார்கள். அந்த அபிமானத்துக்கும் தியாகத்துக்கும் உங்கள் பதில் என்ன?

நீங்கள் ஏன் அவரவர்கள் பின் காலத்துக்கு மிகவும் உபயோகப்படும்படி — அவர்கள் கல்யாணத்துக்கோ, அல்லது படிப்புக்கோ, அல்லது குடும்பத்தின் சௌகர்யமான எதிர்கால வாழ்வுக்கோ — உடனேயே இன்ஷ்யூர் செய்து கொள்ளக்கூடாது? ஒவ்வொருவருடைய வாழ்க்கையின் லட்சியத்துக்கும், சந்தோஷத்துக்கும் அது ஒரு தூண்டுகோலாகும்.

யுனைடெட் இந்தியா லைப்
அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

எஸ்பிளனேட் **மதராஸ்.**

**இந்தியா பூராவும் பிராஞ்சுகளும்
ஏஜென்ஸிகளும் உண்டு.**

சம தரிசனமும் தீர்க்க தரிசனமும்

[பி. ஸ்ரீ.]

ஜாதிவிஷயமாக ராமாநுஜர் கொண்டிருந்த சமரஸ நோக்கத்திற்கு வழிகாட்டியவர்கள் ஆழ்வார்கள். திருப்பாணாழ்வார் கதையும், தொண்டரடிப்பொடியாழ்வார், பெரியாழ்வார், நம்மாழ்வார் கொள்கைகளும் ராமாநுஜருக்கு விசேஷமாக வழிகாட்டினவென்று சொல்ல வேண்டும்.

ஜாதீய ஸமரஸம்

'சுடர்ச் சோதி'யான ஈச்வரன் சன்னிதியிலே தற்சோதனை செய்து பார்க்கும்போது, "நீசனேன், நிறைவு ஒன்றும் இல்லேன்!" என்ற பெரும் பணிவு வந்துவிடுகிறது, நம்மாழ்வாரைப்போன்ற பக்தி சிரேஷ்டர்களுக்கும். தற்சோதனை செய்து குறைகளை உணர்ந்தவர்கள் தங்களை நீசர்களென்று சொல்லிக் கொள்வார்கள்; ஆனால் பிறரை அப்படிச் சொல்லத் துணிவார்களா?

பாகவதர்கள் குலம் முதலியவற்றால் எவ்வளவு 'தாழ்ந்தவ'ராயினும், அவர்களுடைய குலத்தைத் தாழ்ந்த குலமாகக் கருதாமல், 'தொழுகுல'மாக—அதாவது தொழுதற்கு உரிய உயர்குலமாக—மதிக்க வேண்டுமென்று சொல்லுகிறார் நம்மாழ்வார் :—

குலம்தாங்கு சாதிகள் நாலிலும்
கீழ்இழிந்(து) எத்தனை
நலம்தான் இலாத சண்டாள
சண்டாளர்கள் ஆகிலும்,
வலம்தாங்கு சக்கரத்(து) அண்ணல்மணி
வண்ணற்(கு) ஆள்என்(று) உள்
கலந்தார் அடியார் தம்அடியார்,
எம்அடிகளே !

என்று பாடுகிறார்.

"சண்டாளர்களென்று கருதப்படுகிறவர்களும் பக்தர்களாயிருந்தால், அவர்களை நான் தாழ்ந்தவர்களாக மதிக்கமாட்டேன்; பெரியவர்களாகவே மதிப்பேன்!" என்று மாத்திரம் சொல்லவில்லை நம்மாழ்வார். "அவர்களோடு தொடர்புள்ளவர்களையும்—ஆம், தொடர்புள்ளவர்களையெல்லாம்—கௌரவிப்பேன்" என்கிறார். "அவர்களுடைய அடியார்க்கு அடியார்களாயுள்ளவர்களும் விசேஷ கௌரவத்திற்கு உரியவர்கள் !" என்கிறார்.

இந்தப் பாட்டும், இதே கொள்கையை வெளியிடும் தொண்டரடிப்பொடி யாழ்வார் பாடல்களும் ராமாநுஜர் உள்ளத்தில் ஊறிக் கிடந்து, அவருடைய ஜாதீய ஸமரஸ உணர்ச்சியை உருவாக்கியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

நம்மாழ்வார் பலவேறு வகுப்பினர்களான பாகவதர்களையும் சந்தித்துக் கௌரவித்திருக்கக் கூடும். அவர்களை, 'என்னை ஆண்டார்' என்றும், 'சிறுமா மனிசர்' என்றும் குறிப்பிடுகிறார். அவர்கள் தோற்றத்தில் உலகத்தாரைப் போலிருந்தாலும், பகவத் பக்தியில்—மகிமையில்—மகா புருஷர்களாயிருந்தார்களாம். அவர்களுடைய பழக்கம், நம்மாழ்வாருக்கு ஸர்வ ஜாதீய ஸமரஸ மனப் பான்மையை உண்டாக்கியிருக்கக்கூடும்.

சமய சமரஸம்

விஷ்ணு பக்தர்களோடு வேறு பக்தர்-கூட்டங்களும் அக்காலத்து ஆழ்வார் திருநகரியில் இருந்திருக்க வேண்டும். சிவ பக்தர்கள் மட்டுமல்ல. அருகக் கடவுளின் பக்தர்களான சமணர்களும், புத்தனை வழிபட்டு வந்த சாக்கியர்களும் அவ்வூரில் இருந்தார்களென்று ஊகஞ் செய்யலாம்.

நம்மாழ்வார் காலத்தில் மதச்சண்டைகள் ஓய்ந்து விட்டன : ஜைன பௌத்த மதங்களோடும் சண்டையில்லை ; சைவ வைஷ்ணவர்களின் சண்டையுமில்லை

திருமழிசை யாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வாரைப்போல் நம்மாழ்வாருக்கு மதாவேசம் கிடையாது.

நம்மாழ்வார் எல்லாத் தெய்வங்களையும் மகாவிஷ்ணுவின் தோற்றங்களாகக் கருதுகிறார்: சிவனும் பிரம்மாவும் மகாவிஷ்ணுவின் முக்கியமான அம்சங்கள். எனவே, நம்மாழ்வாருக்கு ஸர்வ ஜாதிய ஸமரஸ மனப்பான்மையோடு, ஸர்வ சமய சமரஸ மனப்பான்மையும் இருந்ததென்று சொல்லலாம்.

தானும் சிவனும் பிரமனும் ஆகிப்
பணைத்த தனிமுதலைத்,
தேனும் பாலும் கன்னலும் அமுதும்
ஆகித் தித்தித்(து)என்
ஊனில், உயிரில், உணர்வினில் நின்ற
ஒன்றை உணர்ந்தேனே

என்பது நம்மாழ்வாரின் பக்தியனுபவம்.

மும்மூர்த்திகளாக விளங்க ஒரே விதையைத் தாம் உணர்ந்து கொண்டதாகவும், அது உடம்பிலும் உயிரிலும் உணர்விலும் தேனும் பாலும் சர்க்கரையும்போல் தித்தித்திருப்பதாகவும் சொல்லுகிறார். என்ன அருமையான சமரஸ அனுபவம்!

......அரியை, அயனை, அரனை அலற்றி
அவா அற்று வீடுபெற் றகுரு கூர்ச்சட
கோபன்

என்று திருவாய் மொழியின் கடைசிப் பாட்டு நம்மாழ்வாரைக் குறிப்பிடுவதிலிருந்து, இந்த ஆழ்வாரின் சமரஸ ஞானம் விசேஷமானதென்றுதெரிகிறது.

சிவபெருமானை நம்மாழ்வார் 'உயர் முக்கட் பிரான்' என்றும், 'முக்கண்ணப்பா' வென்றும், "ஒருவன் என்று ஏத்த நின்ற நளிர்மதிச் சடையன்" என்றும் அருமையாகவும் கௌரவமாகவும் குறிப்பிடுகிறார். இன்னும் நம்மாழ்வார்,

நீறுசெவ் வேஇடக் காணில்,
நெடுமால் அடியார்என்று ஓடும்

என்று தமது அனுபவத்தைச் சொல்லும்போது, இவருடைய சைவ வைஷ்ணவ சமரஸம் எவ்வளவு தீவிரமாகப் போகிறதென்று ஆச்சரியப்படுகிறோம்.

மேலும்,

கரியமேனிமிசை வெளியநீ றுசிறி தேஇடு
பெரியகோ லத்தடங் கண்ணன் [ம்

என்று, சிவபெருமானுக்கும் தமது மேனியில் இடங் கொடுத்திருக்கும் இஷ்ட தெய்வத்தை இவர் வருணிக்கிறார். 'சிவ விஷ்ணு ஒருமை'யை நம்மாழ்வார் மற்ற ஆழ்வார்களைக் காட்டிலும் அதிகமாக வற்புறுத்தியிருக்கிறாரென்பதில் சந்தேகமில்லை.

இந்த விதமான சமரஸ உணர்ச்சி, வேறு சமயங்களையும் துவேஷமில்லாமல் தழுவிக் கொள்ளுகிறது.

வணங்கும் துறைகள் பலபல ஆக்கி,
மதிவிகற் பால்
பிணங்கும் சமயம் பலபல ஆக்கி,
அவை அவைதோ(று)
அணங்கும் பலபல ஆக்கி,
நின்மூர்த்தி பரப்பிவைத்தாய்!

என்கிறார் நம்மாழ்வார்.

எத்தனை இஷ்ட தெய்வங்கள், மதக் கோட்பாடுகள், உபாஸனை - முறைகள் ஏற்பட்டிருக்கின்றன உலகத்திலே! இத்தனை வேறுபாடுகளுக்கும் ஜனங்களுடைய அறிவு - வேறுபாட்டால் ஏற்பட்டிருக்கும் பழக்க வழக்கங்கள் முதலியன காரணமாகுமென்பது குறிப்பு.

கடவுளுண்மையைக் குறித்துப் பல மதத்தினரும் யானை கண்ட குருடர் போல் ஏதோ ஒரு விதமாக ஒவ்வொரு பகுதியைத்தான் அறிந்துகொண்டார்களென்றும், முற்றும் கண்டவரில்லையென்றும், உண்மையில் அவன்,

யாவையும் எவரும் தானாய்
அவரவர் சமயந்தோறும்
தோய்விலன்

என்றும் முடிவு கட்டுகிறார் நம்மாழ்வார்.

புதிய சமரஸ யுகம்

உண்மையான கடவுளுணர்ச்சி—தெய்வ நாட்டம் — அதிகரிக்க அதிகரிக்க, சமரஸ சன்மார்க்கமும் ஜாதிய சமரஸ

மும் அதிகரிக்கும். இதன் பயனாக இந்த உலகத்திலே ஒரு ஒரு புதிய யுகம் பிறக்கும்—என்பது நம்மாழ்வார் நம் மாழ்வார் நம்பிக்கை. அப்படிப்பட்ட புதிய யுகத்தையும் உலகத்தையும் நம் மாழ்வார் மனக் கண்ணால் கண்டு,

பொலிக! பொலிக! பொலிக!
  போயிற்று வல்லுயிர்ச் சாபம்;
நலியும் நரகமும் நைந்த;
  நமனுக்குஇங்கு யாதொன்று மில்லை;
கலியும் கெடும்கண்டு கொண்மின்;
  கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
மலியப் புகுந்(து)இசை பாடி
  ஆடி உழிதரக் கண்டோம்!

என்று குதூகலப்படுகிறார்.

உண்மையான பாகவத தருமம் பெருகிப் பக்தர்கள் அதிகரித்துப் பகவத் குணங்களை இசையில் அமைத்துப் பாடி ஆடிப் பூமியெங்கும் சஞ்சரிப்பதால் உயிரைப் பிடித்த சாபம் போய்விட்ட தென்றும், நரகங்கள் அழிந்து நமனே வேலையில்லாமல் திண்டாடுகிறானென்றும் சந்தோஷப்படுகிற நம்மாழ்வார், கலியுகமும் போய்விடு மென்று சொல்லி, அந்த நிலை அப்படியே மங்களமாக மேலும் மேலும் பெருகி விளங்க வேணுமென்று வாழ்த்துகிறார்.

குதூகலம் அதிகப்படுகிறது. பாகவத தர்மம் பரவுவதால் விரைவில் கலியுகம் நீங்கிக் கிருத யுகம் என்ற சத்திய யுகம் பிறக்குமென்று கருதுகிறவர், எங்கும் வியாபித்திருக்கும்பாகவதர்களுக்குப்பூமியில் கால் பாவவில்லையென்றும், அவர்கள் நடந்தும் பறந்தும் கூத்தாடுகிறார்கள் என்றும், மனக் கண்ணால் தாம் காண்பதை இசையில் அமைத்துப் பாடுகிறார்:

இரியும் கலியுகம் நீங்கித்
  தேவர்கள் தாமும் புகுந்து,
பெரிய கிருதயுகம் பற்றிப்
  பேரின்ப வெள்ளம் பெருகக்,
கரிய முகில்வண்ணன் எம்மான்
  கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல்
இரியப் புகுந்(து)இசை பாடி
  எங்கும் இடங்கொண் டனவே!

என்று அவர்களுடைய இசையோடு தம்முடைய இசையையும் சேர்க்கப் பார்க்கிறார் நம்மாழ்வார்.

பூமியிலே தெய்வ வாழ்க்கை வாழும் பாகவதர்களோடு, வானத்திலுள்ள தேவர்களும் இறங்கி வந்து கலந்து கொள்ளுகிறார்களாம். இப்படி விண்ணும் மண்ணும் சந்திக்கும்போது, காலம் போவதற்குமுன் கலியுகம் ஓடிப் போகிறதாம் தன் குறுகிய ஆசைகளோடும் பெருந் துன்பங்களோடும்; கிருத யுகம் வந்து விடுகிறதாம் தன் பெரிய பெரிய நோக்கங்களோடும். பேரின்பம் பெருகி வெள்ளமிடுகிறது! ராட்சஸ சுபாவமுள்ளவர்களுக்கும் அசுர சுபாவமுள்ளவர்களுக்கும் இட மில்லையாம், வேலையில்லையாம். இந்தப் புதிய உலகத்திலே, யுகத்திலே. இதில் சந்தேகம் ஒன்றுமில்லை யென்கிறார் ஆழ்வார். அசுர - ராட்சஸ சுபாவங்களோடு பகை, பசி, வியாதி முதலான தீமைகளும் போய்விடும் என்கிறார்.

கொன்றுயிர் உண்ணும் விசாதி
  பகை பசிதீயன எல்லாம்
நின்(று)இவ் வுலகில் கடிவான்
  நேமிப் பிரான்தமர் போந்தார்!

என்று உறுதி கூறுவதைக் கேளுங்கள்.

பகவானுடைய அன்பர்கள் தங்கள் அன்பினாலேயே பகை, வெறுப்பு, பசி, பிணி முதலான அசுர சம்பத்தைப் போக்கி, எல்லாருக்கும் நன்மை தரும் தெய்வ சம்பத்தைக் கொண்டுவந்து விடுவார்களாம். இதற்காக மற்றவர்களும் பக்தர்களோடு ஒத்துழைக்க வேண்டுமாம். எப்படி? அசுர சுபாவமாகிய 'கறுத்த மன'த்தைப் போக்கிச் சிந்தையைச் சமரஸ சன்மார்க்க நெறியிலே நிறுத்தவேண்டு மென்கிறார்.

தம்முடைய பாகவத தர்மம் வளர்ந்தோங்குவதால், ஜாதிய சமரஸமும் சமய சமரஸமும் ஏற்பட்டு ஒரு புதிய உலகம் தோன்றுமென்பது நம்மாழ்வார் கனவு.

கண்டோம்! கண்டோம்! கண்டோம்!
கண்ணுக்கு இனியன கண்டோம்!

என்று அந்த ஆனந்தக் கனவு - லோகத்தைப் பாடுகிறார், ஆனந்தமாக.

நமது ஸ்டர்லிங் கடன்

[எம். என். ரங்காச்சாரி, எம். ஏ., எம். எல்.]

ஆங்கிலேயர் அடியெடுத்து வைத்தது முதல் அவர்களிடம் கடன் பட்டுக் கிடந்த இந்தியா இன்று ஒரு 'முதலாளி'யாக விளங்குகிறது. 800 கோடி ரூபாய்க்குமேல் கடன் இருக்கிறது. நாம் கொடுக்கவேண்டியது அல்ல. ஆங்கிலேயர் நமக்குக் கொடுக்கவேண்டிய கடன் 800 கோடி ரூபாய்க்குமேல்.

இந்த யுத்தத்தினால் ஏற்பட்ட விசித்திர மாறுதல்களில் இதுவும் ஒன்று. நம் ஊரில் இரும்பு கடைக்காரனும் 'மிலிடரி கண்டிராக்டரும்' திடீரென்று லக்ஷப் பிரபுவும் கோடீஸ்வரனும் ஆவதைப் பார்க்கிறோம். நாட்டில் லக்ஷக் கணக்கில் பட்டினியாலும் பிணியாலும் மக்கள் மடியும்பொழுது லக்ஷக்கணக்கில் பணம் சேர்க்கும் 'புதுப் பணக்காரர்களை'யும் நாம் பார்க்கிறோம். அது போல அல்லவா இருக்கிறது இந்தியாவின் புதுச் செல்வமும்.

அதோடு நமக்கு வியப்பும், சிரிப்பும் ஒரு பக்கம் உண்டாகத்தான் செய்யும். இந்தியா திடீரென்று பணக்காரனாய் விட்டது என்கிறோம். ஆனால் கோடிக் கணக்கில் மக்கள் பட்டினியால் வாடுவதேன். புழுக்களைப்போல் துடித்து மாண்டு மடிவதேன்? ஒரு மனிதனுக்குப் பணம் சேர்ந்தால் பட்டினியால் மடிவது எதற்காக? அந்தப் பணத்தைக்கொண்டு உணவுப் பொருள்களையும், உடைகளையும் மற்றத் தேவையான பொருள்களையும் வாங்கக்கூடாதோ? விளங்காத பொருளாதார ரகசியமாக அல்லவா இருக்கிறது இது?

உண்மையில் இது பொருளாதார ரகசியம்தான். மக்கள் பட்டினியால் வாடுவதும், பிணியால் மடிவதும்தான் நமது தேசம் பணத்தைச் சேர்க்கக் காரணம் என்பதை அறியும்பொழுது இந்த மர்மம் பெருத்த அபாயமாகத் தோன்றுகிறது.

நாம் பணக்காரரானது மிகச் சுலபமான வழியில். போரில் ஈடுபட்டிருக்கும் இங்கிலாந்திற்குப் பல பொருள்கள் இந்தியாவிலிருந்து வேண்டியிருந்தது. சணல் முதல் இரும்பு வரை பல மூலப் பொருள்களை இந்தியாவில் இருந்து இங்கிலாந்து வாங்கியது. அதோடு வட ஆபிரிக்காவிலும் கீழ் தேசங்களிலும் போரிடும் லக்ஷக்கணக்கான ஆங்கில சிப்பாய்களுக்காக உணவு உடை முதல் யுத்த தளவாடங்கள் வரை இந்நாட்டிலிருந்து பிரிட்டன் எடுத்துக்கொண்டது. இந்தப் பொருள்களை எல்லாம் பிரிட்டன் விலை கொடுத்துத்தான் வாங்கியது. இனாமாகப் பிடுங்கிக் கொண்டதல்ல. என்னதான் இந்தியா அடிமை நாடாக இருந்தபோதிலும் அவ்வளவு தூரத்திற்குப் போகப் பிரிட்டனுக்கு மனம் வரவில்லை.

விலை கொடுத்து வாங்கியது என்றால் தங்கமா கொடுக்க முடியும்? அதுவும் யுத்த காலத்தில், சமாதான காலங்களில் நம்முடைய ஏற்றுமதிக்குப் பதிலா அங்கிருந்து சாமான்களைக் கொண்டுவந்து குவித்து நமது தொழிலாளிகளின் பிழைப்பில் மண்ணைப் போடுகிறதே அம்மாதிரியும் செய்ய இங்கிலாந்தால் இயலவில்லை. அவர்களுடைய உற்பத்திகள் எல்லாம் அவர்களுடைய யுத்த முயற்சிக்கே போதாமல் இருக்கும்பொழுது நமக்கு அனுப்புவது எவ்வாறு? ஆகவே

அந்த நீண்ட கனவிலே, ஜாதீய சமரஸம் முதலான சில அம்சங்களை ராமானுஜர் முதலான சில பெரியோர்கள் நனவாக்க முயன்றார்கள். ஆனால் ஸர்வ சமய சன்மார்க்க சமரஸம் என்ற ஆழ்வார் கனவை நனவாக்க விசேஷ முயற்சிகள் எதிர்காலத்திலேதான் நடைபெற வேண்டும்.

ஸ்டார்லிங் என்னும் கடன் பத்திரங்கள் கொடுத்துக் கொண்டே வந்தார்கள். அவர்களுக்குத் தேவையான அளவு, அவர்கள் குறிப்பிட்ட விலைக்கே சாமான்களை இங்கு வாங்குவது பதிலுக்குக் காகிதங்களை நீட்டுவது. இம்மாதிரி ஏராளமாகக் கடன் பத்திரம் நமது அரசாங்கத்திடம் சேர்ந்துவிட்டது. நாமும் 'பணக்காரர்' ஆகிவிட்டோம்.

இம்மாதிரி பெருந்தொகை சேர்ந்ததால் உண்மையில் நமது நாட்டிற்கு ஏதாவது லாபம் உண்டா என்று பார்க்க வேண்டும். நாம் இங்கிருந்து அனுப்பிய பொருள்கள் எல்லாம் வியாபாரத்திற்காக அனுப்பியது அல்ல. மனம் ஒப்பி நாமாக அனுப்பியதல்ல. நமது எஜமானர்களுக்குத் தேவையாக இருந்தது. அவர்களாகப் பார்த்து எடுத்துக் கொண்டார்கள். ரொம்பவும் தயவோடு விலைக்கு என்று எடுத்துக் கொண்டார்கள். நமது நாட்டிலே நாம் தயாரிப்பது நமக்கே போதாமல் இருக்கிறது. எவ்வளவு விலை கொடுத்தாலும் பண்டங்கள் கிடைப்பதில்லை. பஞ்சமும் பட்டினியும் தலைவிரித்துத் தாண்டவம் ஆடுகின்றன. நமக்கு மிஞ்சியல்லவா விலைக்கு விற்கவேண்டும். ஏழை இந்தியா, காய்ந்த தன் வயிற்றை இன்னமும் இறுக்கிக் கொடுத்த பொருள் நமது ஏற்றுமதிகள். இன்று வங்காளத்திலும் மலபாரிலும், ஏன் நமது தமிழ் நாட்டிலும்கூட மக்கள் பட்டினியால் மாண்டு மடிவதால் நாம் சாதித்த காரியம் நமது வெளிநாட்டு ஏற்றுமதிகள்.

நமது துன்பம் இத்துடன் நின்றுவிடவில்லை. நம்மிடமிருந்து பொருள்களை வாங்கிக்கொண்ட இங்கிலாந்து பதிலுக்கு கடன் பத்திரங்கள் கொடுத்தது. ஆனால் இங்கிருந்து பொருள் அனுப்பும் வியாபாரிக்கு, ஆலை முதலாளிகளுக்கு அப்பத்திரங்களையே கொடுக்க முடியுமா? அவர்கள் ரூபாய் வேண்டும் என்றார்கள். இந்திய அரசாங்கம் உடனே காகித ரூபாய்கள், 'நோட்'டுகள் அச்சடிக்கத் தொடங்கின. கோடிக்கணக்கில் வெளியிட்டார்கள். ஆயிரம் ரூபாய் முதல் ஒரு ரூபாய் வரை அச்சடித்தார்கள். 1939 நவம்பரில் 217 கோடி ரூபாயாக இருந்த நமது 'நோட்' வெளியீடு 1942-ல் அதே மாதத்தில் 800 கோடி ரூபாய் ஆகிவிட்டது. வெள்ளியும் பொன்னும் இருப்பில் வைத்து வெளியிட்டுவந்த சர்க்கார், ஸ்டர்லிங் கடன் பத்திரத்தை இருப்பில் வைத்துக் காகித ரூபாய்கள் வெளியிட்டார்கள். தங்கத்திற்கும் வெள்ளிக்கும் சமம் பிரிட்டனின் கடன் பத்திரங்கள் என்றும் சொன்னார்கள்.

இந்த நோட்டு வெள்ளத்தால் நாட்டில் பணப் புழக்கம் அதிகமானது. ஆனால் அதற்குத் தகுந்தாற்போல் பண்டங்களின் உற்பத்தி அதிகரிக்கவில்லை. உற்பத்தி செய்வதில் ஒரு பகுதியை வெளியே அனுப்பி வருகிறோம். ஏற்றுமதி அதிகரிக்க அதிகரிக்கக் கடன் பத்திரங்கள் ஏறுகின்றன. நோட்டு வெளியீடு அதிகமாகிறது. பணம் இருக்கிறது. ஆனால் வாங்க பண்டம் இல்லை. பொருள்களின் விலை 3 மடங்கு 4 மடங்கு ஏன் 10 மடங்கு இவ்வாறெல்லாம் ஏறுகிறது. ஏழைகள், சம்பாதித்து சாப்பிடுபவர்கள். வருமானம் அதற்குத் தகுந்தாற்போல உயருவதில்லை. நெற்றி வேர்வை நிலத்தில் பட உழைத்துப் பாடுபடும் விவசாயியின் வருமானம் ஏற்றாற்போல் உயரவில்லை. வியாபாரியும், மில் முதலாளிகளும் நோட்டுப் பிரவாகத்தைத் தேக்கிக் கட்டுகிறார்கள். அவர்களுக்குப் பணத்தை என்ன செய்வது என்று தெரியவில்லை. நாட்டிலே பட்டினியும் பஞ்சமும் அதிகரிக்கிறது.

இதுதான் நாம் பணக்காரனான கதை. வறுமையாலும் நோயாலும் வாடுகிறோம். பாங்கியில் நமது கணக்கில் பணம் ஏறிக் கொண்டே வருகிறது. எடுத்துச் செலவு செய்யலாமே என்றால் பணம் கைக்கு வரமாட்டேன் என்கிறது. யுத்தம் முடிந்த உடன்தான் கிடைக்குமாம்!

யுத்தம் முடிந்த உடனாவது நமது துன்பத்திற்கும் துயரத்திற்கும் விடிவு வரும் என்ற நம்பிக்கைதான் நமக்கு இருக்கிறது. நமது பட்டினியும் சாவும் வீண் போகாது. நமது தியாகத்திற்குப் பலன் கிடைக்காமல் இருக்காது என்றுதான் நம்

பிக் கொண்டிருக்கிறோம். யுத்தம் முடிந்த பிறகாவது இந்த ஸ்டர்லிங் பத்திரத்திற்கு மதிப்பு ஏற்படும். நாம் அனுப்பிய சாமான்களுக்குப் பதிலாக வெளி நாடுகளில் இருந்து நமக்கு வேண்டிய யந்திரங்களையும் மற்றச் சாமான்களையும் தருவிக்கலாம்என்ற ஆசை நமக்குஇருக்கிறது

ஆனல் அடிமைத் தனத்தில் உழலும் இந்தியாவிற்கு அதையும் நிச்சயமாகச் சொல்ல முடியாது. சத்தியமும் நியாயமும் நமது பக்கம் இருக்கின்றன. ஆனல் நமது உரிமைகளை நாம் அடையப் பலம் நம்மிடம் இல்லை. நமக்குச் சேரவேண்டிய உரிமைகளையும் நியாயம் பேசி கெஞ்சிக் கேட்கும் நிலையில் அல்லவா நாம் இருக்கிறோம். யுத்தம் முடிந்த உடன் இங்கிலாந்து தன் கடன்களைக் கொடுக்க மறுத்தால் நம்மால் என்ன செய்யமுடியும்? ஏன், சென்ற யுத்தத்தில் ஐரோப்பிய நாடுகளுக்குக் கடன் கொடுத்த அமெரிக்காவே தன் கடன்களை வசூலிக்க முடியாமல் முழித்ததே. அடிமை இந்தியாவால் என்ன செய்யமுடியும்.

செய்த தியாகமெல்லாம் வீண் போய் விடுமோ என்ற நமது அச்சம் வீண் மனக் கற்பனை அல்ல. இங்கிலாந்திலுள்ள பத்திரிகைகள் 'மாஞ்செஸ்டர் கார்டியன்', 'இகனமிஸ்ட்' உள்பட இவ்வபிப்பிராயத்தைப்பற்றி எழுதி இருக்கின்றன. உலக சமாதானத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும் பாடுபடும் இப்போரில் கலந்து கொள்ளும் பொறுப்பு எல்லா நாடுகளுக்கும்உண்டு. தன்னல்இயன்றதியாகத்தைச் செய்யும் கடமை ஒவ்வொரு நாட்டிற்கும் உண்டு. அதற்காகப் பிறநாடுகளிடமிருந்து பிரதிப் பிரயோஜனத்தையோ, பயனையோ எந்நாடும் எதிர்பார்க்கலாகாது. ஆகவே இந்தியாவும் தன் ஸ்டர்லிங் கடன்களை மறந்துவிட வேண்டும் என்ற கொள்கையெல்லாம் இங்கிலாந்தில் கிளம்புகின்றன. நமக்கும் அச்சம் உண்டாகத்தான் செய்கிறது.

ஆனல் இந்த பொருளாதார அரசியல் ஞானிகள் எல்லாம் ஒரு விஷயத்தை மறந்து விடுகிறார்கள். உலக சமாதானத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும் நடைபெறும் போரில் கலந்து கொண்டகால் இந்தியாவிற்கு ஏற்படும் பயன் என்ன? அந்த ஜனநாயகம் இந்தியாவிலும் ஏற்பட்டு நமது அடிமைத்தனம் நீங்குமா என்பதை இவர்கள் சொல்லவில்லை. அதோடு ஒவ்வொரு நாடும் செய்யும் தியாகம் தனது சக்திக்கு ஏற்றாற்போல் இருக்கவேண்டும். லக்ஷக் கணக்கானவர் பட்டினியால் மாளவும், நாடு முழுவதும் பஞ்சத்தில் ஆழ்ந்து வருந்தவும் ஒரு நாட்டைத் தியாகம் செய்யச் சொல்லும் உரிமை எந்நாட்டிற்கும் இல்லை. இவற்றோடு யுத்தத்தில் கலந்து கொள்ளும் வரை அமெரிக்கா ரொக்கத்திற்கே சாமான்களை விற்று வந்தது, இப்பொழுதும் கடனுக்கும் வாடகைக்கும் தான் தளவாடங்களை அனுப்புகின்றன என்பதை நினைத்துப் பார்த்தால் நம்முடைய கட்சி எவ்வளவு பலமானது, நியாயமானது என்பது நன்கு விளங்கும்.

நம்முடைய தியாகம் வீண் போகக் கூடாது. இதை இந்திய அரசாங்கமும் நன்கு மனதில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆங்கில அரசாங்கமும் அறியும்படிச் செய்யவேண்டும். இப்பொழுது உள்ள இந்திய அரசாங்கம் இந்தக் கடன் பத்திரங்களை நமக்குச் சேர வேண்டிய உரிமையாகப் பாவிக்கவில்லை. பெருத்த நிர்வாக பாரமாகக் கருதி இப்பெருந் தொகையை எவ்வாறு செலவழிக்கலாம் என்று பார்க்கிறார்கள். நமது பழைய கடன்களைத் தேடிக் கண்டு பிடித்துத் தீர்க்கிறார்கள். நம்மிடமிருந்து பென்ஷன் பெறவேண்டிய ஆங்கில உத்தியோகஸ்தர்களுக்காக நிதி ஏற்படுத்த நினைக்கிறார்கள். வேறு எந்தெந்தச் செலவுகளை யெல்லாமோ தேடிக் கண்டு பிடிக்கிறார்கள். நமது நிதியை வீண் விரயம் செய்கிறார்கள்.

நமது கடன் பத்திரங்களை, ஸ்டர்லிங் நிதியை, நமது நாட்டிற்கு அவசியமான சாமான்களை வெளிநாடுகளில் வாங்க உபயோகிக்க வேண்டும். முக்கியமாக நமது தொழிற்சாலைகளுக்கும், வியவ

அர்ச்சுனன் ரதம்

[நா. கி. நாகராஜன், பி. எஸ்ஸி. (ஆனர்ஸ்)]

தமிழரின் அறுவடைக் கொண்டாட்டமாகிய பொங்கலையே தைமாதம் தொடக்கமாகக் கொள்கிறது. சூரியன் தெற்கிலிருந்து தன் பிரயாணத்தை ஆரம்பிக்கிறான்; ஒவ்வொரு நாளும் அவன் ஆதிக்கம் அதிகமாகிறது; குளம் குட்டைகளில் நீர் வரண்டுகொண்டே போகிறது; பூமியில் கார்காலத்துப் பசுமை மாறி, முதலில் பொன்னிறம் தோன்றிப் பின்னர் அதுவும் மறைந்து வரட்சியும் தோன்றுகிறது; வாயுபகவானும் சூட்டினால் வலி குன்றியவன் போல வலைந்த ருதுவின் தென்றலையும் வீச மறந்துவிடுகிறான்; வெப்பம் காரணமாக சர்க்காரின் தலைநகரமும் மாறுகிறது; நீலவானமோ சிறிதும் மாசற்று விளங்குகிறது. நிலமும் அடுப்பில் வைத்த இரும்புபோல் சூடேறிக் கொண்டே போகிறது.

சித்திரை மாதம். வெப்பம் மிக்கு விளங்கும் இந்நாளில், பகலில் சிறிது சிறிதான மேகங்கள் வானத்தில் தோன்ற ஆரம்பிக்கின்றன. வெப்பத்துடன் போராடுவன போல இவைகள் பகலில் அடுக்கடுக்காக நீண்டு வளர்ந்து கொண்டே போகின்றன. பஞ்சை யொத்த இவ்வெண் மேகங்களை பருவக் காற்றின் கட்சியக்காரர்கள். பகல் நேரத்தில் இவைகளைச் சற்று நேரம் கவனித்தாலே, இவைகளின் அதிவிரைவான வளர்ச்சி நன்று புலப்படும். இவைகளைக் கூட்டு மேகங்கள் (Cumulus clouds) என்று கூறுவர். மலைச்சிகரங்களைப் போல வளரும் இம்மேகங்கள் பிரம்மாண்டமாக உயருகின்றன. ஆனால் உலகின் எதன் வளர்ச்சிக்கும் ஒரு முடிவுண்டு என்னும் விதியை இயற்கையும் மீறமுடியாது. மேகங்கள் வளருவதும் நிற்கிறது. கோபுரம் போன்ற முடி, குடை விரித்தாற்போல விரிகிறது. இப்பரந்த முடி பட்டரை வடிவாக இருப்பதால் இம்மேகத்தைப் பட்டரையோடு கூடிய கூட்டு மேகம் (Cumulus with anvil) என்பர். வெண்மேகமும் திரண்டு கார்வண்ணனின் நிறத்தை ஒக்கிறது. இதுவே இடிமேகம்

சாயத்திற்கும் வேண்டிய யந்திர சாமான்களையும் தளவாடங்களையும் வாங்க பயன்படுத்தவேண்டும். இந்தச் சாமான்களையும் எந்நாடு மலிவாகக் கொடுக்கிறதோ அங்கு வாங்கும் வசதி வேண்டும். முக்கியமாக அமெரிக்காவில் வாங்கும் வசதிகளை ஆங்கில சர்க்கார் செய்து தரவேண்டும். இங்கிலாந்திலேயே, அவர்கள் தரும் சாமான்களையே, அவர்கள் குறிப்பிட்ட விலைக்கே வாங்கவேண்டும்; ஆங்கிலத்தொழிலாளிகளுக்கு வேலைகொடுக்கவேண்டும் என்றநிர்ப்பந்தம்கூடாது.

எல்லாவற்றிற்கும் மேலாக பெருத்த அபாயம் வேறொன்று இருக்கிறது. நமது தொழிற்சாலைகளுக்கு வேண்டிய யந்திரங்களும் தளவாடங்களும் அனுப்புவதற்குப் பதிலாக நமக்கு வேண்டாத, நமது நாட்டில் தயார் செய்யக்கூடிய, இங்கிலீஷ் சாமான்களை, லங்காஷயர் துணி முதல், பர்மிங்ஹாம் கத்திவரை, சோப் முதல் புட்டிப்பால் வரை, நமக்குச் சேரவேண்டிய கடனுக்கு அனுப்பி நமது நாட்டுத் தொழிலையும் விவசாயத்தையும் நாசம் செய்யலாம். இதற்கு வேண்டிய முயற்சிகளும் நடந்து வருகின்றன. இதனால் நாம் இப்பொழுது படும் கஷ்டம் போதாதென்று பின்பும் வேலையில்லா திண்டாட்டத்தால் அவதிப்படவேண்டி வரும். இதைவிட அவர்கள் தங்கள் கடன் தொகையை கொடுக்காமலேயே இருந்துவிட்டால் கூட நல்லதுதான். ஆனால் இவற்றை யெல்லாம் கட்டாயப்படுத்தும் சக்தி இந்த அடிமை நாட்டிடம் ஏது?

(Thunder cloud) என்று கூறுவர். மனதை அச்சுறுத்தும் இடியோசையும் கண்ணைப் பறிக்கும் மின்னொளியும் வருவது இம்மேகத்திலிருந்தே. கோடை மழை பெய்து நிலமடந்தையின் தாகத்தைத் தணிப்பதும் இதுதான்.

இடியோசை கேட்டுப் பயந்து, அன்னையிடம் ஓடிப் பதுங்கும் சிறுவர்கள், இடி, அர்ச்சுனனின் ரதம் வான வீதியில் ஓடும் சத்தமென்று நம்புகின்றனர். இது சிறுவர்களின் கூற்றுமட்டுமல்ல. தொன்றுதொட்டே இயற்கையன்னையின் ஊழிக்கூத்துப் போன்ற இப்பயங்கரக் காட்சிகளைக் கடவுளின் விளையாட்டென்றே எண்ணி வந்தனர். ஆனால் முதலில் இவற்றின் உண்மைத் தன்மையை நமக்கு அறிந்து காட்டியவர் பெஞ்சமின் பிராங்க்ளின் (Benjamin Franklin) என்ற பௌதிக விற்பன்னர். அவர் காற்றாடி யொன்றை மின் உகைவினால் (Electric Conductor) ஆன கயிற்றில் பிணைத்து இடி மேகத்தினூடே பறக்கவிட்டார். கயிற்றின் மற்றொரு முனையை மின்மானி (Electro meter) யொன்றிற்குப் பிணைத்தார். காற்றாடி மேகத்தில் செல்லும்போது இருந்த மின்மானியின் அசைவிலிருந்து இடியும், மின்னலும் மின்சார இயல்புடையன என்று தீர்மானமாகக் காட்டினார். மேகத்திலுள்ள மின் இயன்கள் (Ions) தாம் இவற்றிற்குக் காரணமென்றும் கூறினார்.

இடிமேகத்தின் தன்மையை நன்கு எடுத்து ஆராய்ந்தவர் சிம்ஸன் (Simpson) என்ற விஞ்ஞானி ஆகும். இவ்விஷயம் தெளிவுபட, உஷ்ணம் பரவும் முறைகளில் ஒன்றான உகைப்பு (Convection) என்பதன் தன்மை புலப்படவேண்டும். ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் காய்ச்சினால் முதலில் அடிப்பாகத்திலுள்ள நீர் சூடாகிறது. அது உடனே லேசாகி மேலெழுகிறது. இவ்விடத்தை இதைவிடக் குளிர்ந்த நீர் வந்தடைகிறது. இதுவும் சூடேறியவுடன் மேலே போகிறது. பாத்திரம் சூடுபடும் வரை நீரோட்டமொன்று மேலே இடைவிடாது போய்க்கொண்டே இருக்கும். இதன் வழியே வெப்பம் தண்ணீர் முழுதும் பரவுகிறது. காற்றில் வெப்பம் பரவுவதும் இவ்வாறே. சூரிய வெப்பத்தினால் சூடேறிய பூமிக்கு அடுத்துள்ள காற்றுப் படலமும் சூட்டினால் லேசாகி மேலே கிளம்புகிறது. காற்று உயரச் செல்லச் செல்லக் குளிர்ச்சி யடைகிறது. ஆயினும் சுற்றிலுமுள்ள காற்றைவிட மேலெழும் காற்றுப் படலம் லேசானதால் இது உயரக் கிளம்பிக்கொண்டே போகிறது. ஆனால் நம்மைச் சூழ்ந்துள்ள காற்றில் எப்போதும் நீராவியும் இருக்கிறதல்லவா? மேலெழும் காற்று குளிரக் குளிர இந்நீராவியும் குளிருகிறது. அதனால் காற்றின் ஈரப்பதன் (Humidity) அதிகரிக்கிறது. ஆதலால் காற்றில் உள்ள ஆவி நீராக நிலை மாறுவது எளிதாகிறது. மேலெழும் காற்றுப் படலம் ஒரு குறிப்பிட்ட உயரத்தை அடைந்ததும் அதிலுள்ள ஆவி நீராக மாறுகிறது. இந்நுண்ணிய நீர்த்திவலைகளே மேகங்கள். ஆவி நீராக மாறும்போது, காற்றுக்குத் தன் மறைகனலை (Latent heat) அளித்து அதைச் சூடாக்குகிறது. ஆயினும் கீழிருந்து வரும் காற்றோட்டம் அதை இன்னும் மேலே கிளப்புகிறது. மேகம் மேலே போகப்போக அதிலுள்ள ஆவி நீராக மாறுவதும் அதிகமாகிறது. இதனாற்றான் மேகமும் நீண்டு உயர வளருகிறது. பகலில் மேகங்கள் விரைவில் நீண்டு வளருவதற்கு நிலத்தின் சூட்டினால் ஏற்படும் காற்றோட்டங்களே (Air Currents) காரணமாகும்.

மேகத்திலுள்ள நுண்ணிய நீர்த்திவலைகளில் பெரும்பாலானவை நேர், எதிர் இவ்விரு மின்னயன்களைக்கொண்டிருக்கின்றன. இவற்றுள் எதிர் மின் நீர்த்திவலைகள் லேசாகவும், நேர் மின் நீர்த்திவலைகள் சிறிது கனமாகவும் உள்ளன. ஆகையால் மேலெழும் காற்றின் வேகத்தில் இவ்விரு வகை மின்சாரங்களும் பிரிவடைகின்றன. மேகத்தின் மேல் பாகத்தில் எதிர் மின்சாரமும், அடிப்பாகத்தில் நேர்மின்சாரமும் திரளுகிறது. இம்மின் இயன்கள் அதிகமாக

ஆக இவற்றின் நடுவே உள்ள காற்றின் மின் ஏகம் (Voltage) அதிகமாகி, மின் விகுவு (Electric Strain) அதிகமாகிறது. ஆகையால் இவை இரண்டும் பிணைக்கப்பட்டு, மின் பொறி (Spark) ஒன்று ஏற்படுகிறது. இதனால் இது ஏற்படும் வழியில் உள்ள காற்று மிகச் சூடாகி ஒளி வீசுகிறது. இதுவே மின்னல். இச்சூடான காற்று, சூட்டினால் அங்கிருந்து வெளியேறுகிறது. இதனால் மின் பொறி யேற்படும் வழி நெடுக வெற்றிடமாகிறது. ஆகையால் சுற்றிலுமுள்ள காற்று, நாலாபக்கத்தி லிருந்தும் இவ் வெற்றிடத்தை நோக்கிப் பாய்கிறது. இதுதான் இடியோசைக்குக் காரணம். ஒளி, ஒலியைவிட பல்லாயிர மடங்கு அதிவேகமானதல்லவா? அதனுற்றான் நாம் மின்னலை முதலில் பார்த்த பிறகே இடியைக் கேட்கிறோம். மேகத்தில், முதலில் நமக்கு அருகாமையிலுள்ள பாகத்திலிருந்தும், பின்னர் தொலைவிலிருந்தும் ஒலி நம்மை அடைவதால் இடியோசை தொடர்ச்சியாகச் சில விநாடிகள் நமக்குக் கேட்கிறது.

இவ்வண்ணம் ஏற்படும் மின் பொறியானது ஒரே மேகத்திலோ, அருகிலுள்ள இரு மேகங்களுள்ளோ நிகழலாம். சில வேளைகளில் மேகம் அதிக உயரத்தில் இல்லாமலிருந்தால், அருகாமையிலுள்ள மின் உகைவுகளுள்ளும், (Conductors) மேகத்தின் மின் அயன்கள் பாயலாம். ஈரமான நிலம் நல்ல மின் உகைவாகும். அதனால்தான் சிலவேளை, மின்னல், பூமி, மரம், உயர்ந்த கட்டிடங்கள் முதலியவற்றில் பாய்கிறது; பலத்த சேதமும் விளைவிக்கிறது.' இடி மழையில் பச்சை மரங்களின் கீழ் நிற்பதன் அபாயம் இதனால் விளங்கும்.

பெருங் கட்டிடங்களில் மின்னலின் அபாயத்தைத் தவிர்க்க, தற்காலத்தில் இடிதாங்கிகள் (Lightning Conductors), கட்டிடத்தின் உச்சியில் வைக்கிறார்கள். இது செப்பினாலான கூரிய முனையுள்ள ஒரு கம்பி. இதைப் பூமிக்குள் ஆழமாகப் புதைக்கப்பட்ட கம்பியோடு பிணைக்கிறார்கள். மேகத்தில் உள்ள மின்னியன்கள் கூரிய முனையுள்ள இடிதாங்கியின் வழியே எளிதில் கம்பியினூடே சென்று பூமிக்குள் அபாயமின்றிப் புகுந்து விடுகின்றன. மின்னலின் அபாயமும் தவிர்க்கப்படுகிறது.

ஆயினும் மனிதன் இயற்கையோடு இடும் போராட்டத்தில் இன்னும் வெற்றி அடைந்துவிடவில்லை. மின்னல் இயற்கை பண்ணையின் ஒரு பயங்கரத் தோற்றமே தவிர வேறு ஒன்றுமல்ல என்று அவன் கண்டறிந்தான். நமக்கு இடியும் மின்னலும் அதன் எழிலினால் ஆச்சரியத்தைத் தருகின்றனவே யொழிய, அச்சந்தருவதில்லை. மேகங்களில் உள்ள மின்சக்தியானது உலகிலுள்ள எல்லாவற்றையும் விடப் பல்லாயிர மடங்கு பெரிது என்பதும் இப்போது அறிந்த விஷயமாகும். ஆனால் இம்மாபெரும் சக்தியைக் கட்டுப்படுத்தவோ, அதைத் தனக்காக உபயோகித்துக் கொள்ளவோ, மனிதனும் அவனுக்கு உறுதுணையான விஞ்ஞானத்தினாலும் இன்னும் முடியவில்லை. ஒருக்கால், வருங்காலத்தில், விஞ்ஞானம் மனிதவர்க்கத்தின் நன்மைக்காக மட்டும் உபயோகப்படும் போதுதான், அன்னை இப்பெரும் சக்தியை நமக்கு அளித்துதவுவளோ?

காலஞ்சென்ற, கும்பகோணம் அத்வைத ஸபா
பண்டிதராயிருந்த மஹாமஹோபாத்யாய, சாஸ்திர ரத்நாகர, மஹோபதேசக,
பிரும்மஸ்ரீ - யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் இயற்றிய

ஸம்ஸ்கிருத கீர்த்தனை

[ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.]

கீர்த்தனை 4

முகாரி ராகம்] [ஆதி தாளம்

ஸாஹித்யம்

பல்லவி

அனாதி வாரண, விக்ன நிவாரண
த்ருபுவன காரண, குருமயி கருணாம்

அனுபல்லவி

ஸர்ஜன பாலன ஸம்ஹ்ருதி விதிஷு,
விதிஹரி புரஹர வீக்ஷித கருண

சரணம்

வ்யாஸ முனிவர வர்ணித சரித,
வாங்மன ஸாதீத சின்மய ரூப,
வரத யக்ஞேச்வர வந்தித சரண.

தாத்பர்யம்

அனாதியான கஜமுகக் கடவுளே, விக்னங்களைப் போக்கடிப்பவரே, மூன்று உலகங்களுக்கும் காரணமானவரே, ஸ்ருஷ்டி, ரக்ஷணம், ஸம்ஹாரம் என்னும் காரியங்களில் பிரும்ப விஷ்ணு ருத்திரர்களால் எதிர்பார்க்கப்படும் தயவையுடையவரே, வ்யாஸ மஹர்ஷியால் வர்ணிக்கப்பட்ட சரித்திரத்தோடு கூடியவரே, வாக்கிற்கும் மனதிற்கும் எட்டாதவரே, ஞான ஸ்வரூபமானவரே, வரன்களை யளிப்பவரே யக்ஞேச்வரனால் வணங்கப்பட்ட சரணங்களை யுடையவரே, என்னிடம் தயை புரியும்.

பல்லவி

(1)		பபதபா	மதபம	கரி	ரிஸஸ	ரிம பப
		அனாதிவா	ரஅணஅ	அஅ	விக்னநி	வஆ ரண
(2)	அ	ப பாதநி தப	மபதப பமகரி	ரிஸ	ரிஸஸ	ரிம பப
	அ	அனா அஅ அதி	வஅஅஅ ரணஅஅ	அஅ	விக்னநி	வஆ ரண
(a)	அ	ஸரீகரீ ஸநிதா	ஸஸ	அ	ஸரீமமா	அ மகரீ ரீகரி
	அ	த்ரிபுவன கஅஆ	ரண		குரு மயிஇ	இகஅருணஅஅ

(b) ரி ஸரீகரீ ஸநிதா ஸஸ அ தஸாரிமா ஸரிமபநித ஸாரிக
ஆம் த்ரிபுவன கஅஆ ரண அ குரு மாபி கஅஅருஉ ணு
[அஅ
ரிஸ ஸநிநிததப பா மதபமகரி ரிஸஸ ரிம பப
அஅ மஅ னஅதிஇ வா ரஅணஅ அஅ விக்னநி வஆரண

அ
அ

அனுபல்லவி

தஅஅஸ் ஸ் ரிஇஇக் ரி ஸரீகரீ ஸ்நிதா ஸ்ா
ஸஅஅர்ஜ ன பாஅஅல ன ஸம்ஹ்ருதி விஇதி ஷ

ஸப தஅஅஸ் ரி ரீகரி ரிரி ரீக்ரி ரி ஸ்ரீக்ரிஸ் ஸ்நிதா ஸ்ா
உஉ ஸஅஅர்ஜ னபாஅஅல னஅஅ அ ஸம்ஹ்ருதிஇ விஇதி ஷ

ஸப தஅஅஸ்ரி ரீ ஸ்ரிமக் ரி ஸ்ரீகரிஸ் ஸ்நிதா ஸ்ா
உஉ ஸஅஅர்ஜனபா லஅனஅ அ ஸம்ஹ்ருதிஇ விஇதி ஷ

ஸ தரீஸஸா ஸநிநித தப அ மபாதபா மகரிஸரிம பா
உ விதி ஹரி புஉரஅ ஹர அ விகீக்ஷித கஅரு உணஅஆ

அ தரீஸஸா ஸநிதரிநீ தப அ மபாபதப மகரிமபதஸாரிக
அ விதிஹரி புஉரஅஆ ஹர அ விகீக்ஷிஇத கஅருஉணஉ
[ஆஅஅ

ரி
அஅ அஹி வாரண.

சரணம்

மாஅம ம மகரீ ஸரிமா அ பஅஅதபா மபபத பா
வ்ய அஅஸ முனிஇஇ வஅர அ வஅஅரணித சஅரிஇ தஅ

அ மாஅவ ம பமகரி ஸரிமா அ பஅஅபதப மபபத பா
அ வ்ய அஅஸ முனிஇஇஇ வஅர அ வஅஅர்ணித சஅரிஇ தஅ

அ தஅஅஸ் ரி ரீ க்ரீ இ ஸ்ரீக்ரீ ஸ்நிதா ஸ்ா
அ வாஸ்ம ன ஸா தீத அ சிசீன்மய ருஉஊ பஅ

அ தரிரீகஸ ஸநி தப அ மபாதபா மகரிம பத ஸாரிக
அ வரதயஅநே ஸ்வர அ வஅர்நித சஅரஅணஅஆஅஅ

ரிஸ ஸநிநிததப பா மதபம கரி ரிஸஸ ரிம பப
அஅ அஅணுஅதிஇ வா ரஅணஅ அஅ விக்னநி வாஆ ரண

அ
அ

ஜீவகாருண்ய யோகம்

[டி. எஸ். ராமாநுஜம், எம். ஏ., எல். எல். பி. (லண்டன்)]

கருணை என்றால் என்ன ?

கலைகள் அறுபத்துநான்கென்பார்கள். அறுபத்தைந்தாம் கலையாய் விளங்கும் அதீத யோகமொன்றை இங்கு வெளியிடத் துணிந்தோம். கருணை என்ற பதத்தைப் பிரித்தால் கரு இணை ஆகும். ஜீவாத்மா கருவுடன் இணைந்த தெவ்வாறு என்று யூகிப்பதே இந்த யோகமாகும். ஜீவகாருண்யத்தின் பெருமையைப் பலர் பலவாறாக எடுத்துக் காட்டியிருக்கலாம். ஆனால் இயற்கையை ஒட்டி அதை அறிவது உலகத்துக்கோர் புதுமை.

எந்த யோகத்திற்கும் குண்டலனி பிரதமம் என்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. ஆனால் அது உற்பத்தியான ரகசியத்தையும், அதன் பிரதம நிர்மாணங்களையும், ஸ்வய இச்சை என்று சொல்லப்படும் அதன் தாத்பர்யத்தையும் அறிந்து கொள்ளாமல், அது ஏதோ ஒரு சக்தி யென்றும், மங்களகரத்தில் உண்டான ஒரு கதி என்றும், அதை ஸ்வாதீனப் படுத்திக்கொண்டால் அநேக தன்மைகளை அடையலாமென்று மாத்திரம் சித்தர்கள் தெரிவிக்கிறார்கள். மேலும், ஸ்தூலத்தில் தெரிந்துக்கொண்ட அளவில், குண்டலினியின் அம்சவகுப்புகளை பலவித ஆசனங்கள் மூலமாய் மிகுந்த கஷ்டங்களுக்குள்ளாக்கி, அதன் பிரதம அண்டத்தை வேறுபடுத்தி அதன் இயற்கைக்கு விரோதமாக மேல் கிளம்பும் கதிகளை ஆலோசிக்கிறார்கள். அம்மனோ பாவத்தின் பயனாக யோகத்திற்குப் பிராரம்பித்த உடனே ஸ்தூல சரீரத்தின் போஷணையை வெறுத்து, சந்நியாசிகளென்றும், தபஸ்விகளென்றும், யோகீச்வரர்களென்றும் பட்டம் தரித்து சில அவதாரங்கள் பிரம்மாவின் கதி அம்ஸங்களை ஒரு நாடகம்போல் உணர்ந்து காட்டிக் கொடுத்திருக்கிறார்களே ஒழிய, அதன் ஸ்வஸ் சொரூபத்தை உணராது திரும்பவும் பூமிக்குள் மனித வர்க்கங்களாய் ஏற்பட்டு வருகிறார்கள்; ஆகலால் அவர்கள் குண்டலினி அம்சத்தால் மோக்ஷமடைந்து விட்டார்கள் என்ற வார்த்தைக்கு அர்த்தம் ஏற்படவில்லை போலும். சிருஷ்டி ஆரம்ப முதல் இன்று வரையில் ஸ்வய, லய, நய என்ற மூன்று தன்மைக்குள் பிரவேசித்து, பிரகிருதிக்குள் நன்றாய் வியாபித்து புலப்படாத அம்சங்கள் புலப்படும் மார்க்கமாய் ஏகோபித்து வந்த ஒரு கதி (புருஷா, ஆண்மை, சிவன்) நமது சரீரத்திற்குள் இருக்கிறது. யாவற்றைய பதார்த்தங்களுக்குள்ளும் இருக்கிறது. அதுதான் குண்டலினியின் ஸ்வய பிரகடனையை காட்டிக் கொடுக்கவல்ல மார்க்கம். மற்ற வழிப் புணைவுகளால் முதல் பிரயத்தனித்த சிருஷ்டிப் பிரகடனையை உள்ளபடி அறியமுடியாது. குண்டலினியை ஸ்வாதீனப்படுத்திக்கொண்டு சித்திகளை அடையுமுன், "குண்டலினி என்றால் என்ன, அது உற்பத்தியானதன் தாத்பர்யம் என்ன, அதினின்று சிருஷ்டி என்பது எந்த மார்க்கத்தில் ஏற்பட்டது, அது அணுவாய் எப்படி ஒரு கதிக்குள்ளிருந்து பிரிந்தது; அணுவின் தாத்பர்யம் என்ன ?" என்ற கேள்விகளைக் கேட்டல்லவோ அறிந்திருக்க வேண்டும். இக்கேள்விகளுக்கு இப்பொழுதாகிலும் தக்க விடை கிடைக்கவேண்டுமென்றால், ஆங்கிலத்தில் இவலூஷன் (Evolution) என்று சொல்லப்படும் இயற்கை சிருஷ்டி லீலையை நன்குணரவேண்டும். அதன் பிறகுதான் சிவன் சீவனாய் (ஜீவனாய்) மாறிய ரகசியமும் உயிரனைத்தும் ஒன்றே என்ற வேதாந்தமும், ஊனைத் தின்று உயிர் வளர்ப்பது என்ற பழக்கத்தின் பிழையும், அப்பிழையை நிர்மூலமாக அகற்றவல்ல ஜீவகாருண்யம் என்ற

யோக ஔஷதத்தின் பெருமையும் மனிதனுக்குத் தெரியவருமென்று தீர்மானிக்கலாம். குண்டலினி சக்தி இருப்பிடமென்று சொல்லப்படும் மூலாதாரத்தைத் தாரமூலமென்று திருப்பிப் படித்த மாத்திரத்திலே கருணையின் இயற்கை அமைப்பு மின்னல் கொடி போல் மனோகாசத்தில் திடீரென்று ஒளி வீசுகின்றது.

சிருஷ்டியின் தர்மம்

மழை பெய்து ஓய்ந்த உடன் வீட்டுக் கூரை ஓட்டிலிருந்து தாரையாகக் கொட்டின ஜலம் சிறு சிறு துளிகளாகக் கொட்ட ஆரம்பிக்கிறது. கடைசியாக ஒரு துளி ஓட்டின் நுனியில் முத்து போல் தங்குகிறது. அதைக் கீழே தள்ள மேலே துளிக்கூட ஜலம் இல்லை. காற்றும் வீசவில்லை. அத்துளி விழாமல் அங்கேயே நின்று விடுகிறதா? இல்லை. அது தன் இருப்பினால் ஏற்பட்ட தாங்க முடியாத ஓர் அவஸ்தையினால் சிறிது நேரத்தில் நீண்டு கீழே விழுகிறது. இவ்வுதாரணம் சிருஷ்டியின் ஆரம்பத்தின் காரணத்தைக் குறிக்க மிகப் பொருத்தமானது. எங்கும் நிறைந்த வெளி; எத்தனை நாள்தான் சூன்யமாயிருக்கும்! அதன் இருப்பினாலேயே அதில் ஏற்பட்ட ஓர் அவஸ்தை; அதனால் அதில் ஒரு கிளர்ச்சி; அக்கிளர்ச்சியினால் அதினின்றும் திரண்டு ஒடுங்கிக் கசிந்தது ஓர் அணு.

எங்குமே நிரந்தரமாக வியாபித்த ஏகவெளிக்கும் அதினின்றும் திரண்டெழுந்த வீரியச் சத்தான அணுவுக்கும் உள்ள சம்பந்தத்தை பாலுக்கும் நெய்யுக்குமுள்ள சம்பந்தத்திற்கு ஒப்பிட்டுச் சொல்லலாம். பாலோ குளிர்ச்சியானது, சாத்வீகமானது. அதை மிகுதிய அளவில் எடுத்துக்கொண்டு காய்ச்சினால், அதிலிருந்து பிரித்தெடுக்கப்படும் நெய் அளவில் சிறியது, ஆனால் தீயைச் சுடர்விட்டு எறியச் செய்யும் தன்மையது. அதுபோல,சிருஷ்டி தர்மத்தையே ஆரம்பித்த ஜீவஅணு, அளவில் மிகச் சிறியதாய் இருந்த போதிலும் செயலில் மிகப் பராக்கிரமம் வாய்ந்தது. அது எப்படி சும்மாயிருக்க முடியும்! சிருஷ்டி தர்மத்திற்குள் வேலை செய்ய துடர்ச்சித்தது. பானையில் உள்ள தயிரை மத்து சுழன்று சுழன்று கடையும்போது, "சர், சர்" என்ற சப்தமும், அலங்கோலமான அலைகள், கொந்தளிப்பு, கணக்கற்ற காத்துக் கொப்பளங்கள், (தயிர் திரண்டு) சிறு சிறு வெண்ணை உருண்டைகள்—இவ்வளவும் தோன்றி, தயிர் மோராவது போல், சிருஷ்டி அணு சுடர்விட்டுச் சுழல ஆரம்பித்ததும் ஓசை, நெருப்பு, காற்று,சூரியன், நட்சத்திரங்கள், கிரகங்கள் முதலான அண்டாண்டங்கள், அதில் சமுத்திரம் முதலான நீர் நிலைகள், இவைகளெல்லாம் தோன்றின. வெளியும் ஆகாயமாயிற்று. இப்போது அந்த அணு எங்கே? அதன் சுழலால் சமைந்த அத்தனையிலும் அது அடங்கிவிட்டது.

சுழல் வானத்தினின்றும் சிதறிப் பிரிந்த தீச்சுடர் அத்துடனேயே சுற்றி வீழ்வதுபோல் சிருஷ்டி அணுவின் வீரச்சுழலிலிருந்து சமைந்த அண்டாண்டங்கள் இன்னும் சுற்றிக்கொண்டே தான் இருக்கிறது. சந்திரன் பூமியைச் சுற்றுகிறது.பூமியும் மற்றக் கிரகங்களும் தன்னைத்தானே சுற்றிக்கொள்வதுடன் சூரியனையும் சுற்றி வலம்வருகிறது. சூரியனும் நட்சத்திரங்களும் சுழன்றுக் கொண்டுதான் இருக்கின்றன. நமக்கும் தெரிந்தவரையில், ஆகாயவெளி முழுவதும், அதனுள் அடங்கிய அண்டகோடிகளுடன், ஏதோ ஒன்றைச் சுற்றுவதின் நிமித்தம் மெள்ள மெள்ள நகர்ந்தே செல்லுகின்றதென்பது வானசாஸ்திரிகள் ஒப்புக்கொண்ட உண்மை. ஆகர்ஷண சக்தியினால் அண்டங்களெல்லாம் பிணைந்திழுக்கப் பெற்று இருக்கிறதென்கிறார்கள். மேற்கண்டவிதம் சமைந்து, அச்சமைப்பின் உள்ளடங்கிய அவ்வீரிய அணுவின் வெளிவீச்சையே ஆகர்ஷண சக்தியென்று அழைக்கிறார்கள் போலும்.

இனிப் பிரிக்கமுடியாது என்று சொல்லக்கூடிய ஒரு சிறு வஸ்துவுக்கு அணு என்ற பெயர் சகஜமாய்க் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஜீவ அணுவை பிரிப்பதென்பது இயலாத காரியம். ஆனால்

அவ்வாறு தானாகவே பிரியும் பக்ஷத்தில் கோடிக்கணக்கான அணுக்களாய்ப் பிரிய முடியும். அப்படிப் பிரிந்த அணுக்கள் அந்த மூல அணுவைப் போலவே பரிமாணத்திலும் குணத்திலும் ஒத்திருக்கும். எவ்வளவு அணுக்களாகப் பிரிந்த போதிலும் அம்மூல அணு தன் உருவத்தினின்றும் குணத்தினின்றும் மாறுபடாது. இதுவே அணுவின் தாத்பர்யம். இவ்வித மூல அணுவைப் பரம அணு (Permanent Atom) என்று சொல்லலாம்.

மண்ணில் புதைத்த விதை முளைத்து மேல் கிளம்புவதும், முட்டையிலடங்கிய உயிர் உருவாகி வெடித்து வெளியே கிளம்புவதும், யாவற்றிலும் பூரணமாக அடங்கி வியாபித்த அணுக்கள் சும்மாயிருக்க முடியாதென்பதைச் சுட்டிக் காட்டுகின்றன. அணுக்கள் ஒன்று சேர்ந்து கடின உருவடைந்ததுதான் உலோகங்கள். பூமியில் மண், கல், ஈயம், இரும்பு, தாமிரம், வெள்ளி முதலிய உலோகங்கள் ஒன்றினிடம் ஒன்றாகத் தோன்றி தங்கப்பாளங்களாகக் காலஅளவில் பரிணமித்ததென்று யூகிக்கலாம். உள்ளே குமறிக் கொண்டிருக்கும் அச்சக்தி ஓய்வெடுக்காமல் அப்போதைக்கப்போது தனக்கு அநுகூலமாக அமையும் உருவுடன் மேல்நோக்கிச் சென்று கொண்டேயிருக்கிறது. புல், பூண்டு, குத்துச் செடி, கொடி, மரம், இவ்விதமாக உருவங்கள் உலோகங்களினின்றும் மேல் வீசப்பட்டன. வைத்திய சாஸ்திரத்தில் தாவரங்களில் சில தங்கச்சத்துடையது, சில இரும்புச்சத்துடையது, சில தாமிரச் சத்துடையது என்றெல்லாம் கூறியிருப்பதால், உலோகங்களின் சாரத்தை உண்டே வெளிவந்தது தாவரங்கள் என்று சொல்லலாம். முற்றிக் கனிந்த மாங்கொட்டையினின்று வண்டு உண்டாகிறதென்ற பேச்சுத் தாவர சத்தின் மிகுதியால் கிருமிமுதல், ஊர்வன, நீர்வாழ்வன, நிலம் வாழ்வன, பறப்பன முதலிய மிருக இனங்கள் தோன்றியதை ஞாபகமூட்டுகிறதல்லவா? ஓரறிவு உயிர்களாகிய தாவர வர்க்கங்களிலிருந்து, புழு முதல் ஈரறிவு, மூவறிவு, நாலறிவு, ஐயறிவு முதலிய படிகளில் விருத்தியுற்றுக் குரங்கு வரையில் மிருகப் பிறவி வந்தது. ஆறறிவு படைத்த மனிதன் குரங்கினிடமாகத் தோன்றினான். மனிதனிடமும் ஜீவ அணுக்கள் ஓயாமல் வேலை செய்து அவனை மேன்படுத்தி வருகிறது. ஆதியில் காட்டுமிராண்டி என்று சொல்லக்கூடும் மனிதன் மிருகத்தைப்போல் வாழ்ந்தான். பிறகு நாகரிகம், அன்பு உணர்ச்சி, மித்திரபாவம், பக்தி, சாந்தம், பொறுமை, அஹிம்சை முதலிய குணங்களின் பெருக்கால் மனிதன் இப்பொழுது தான் வந்தவழியைத் திரும்பிப் பார்க்கவும் தன்னைத் தான் அறியவும் யோக்யதை பெற்று நிற்கிறான். பக்த துகாராம்.

" ஆதிபீஜ ஏகலே,
பீஜ அங்குரனே ரோபவாடலே - ஏகா
பீஜாபோடி, தருகோடிகோடி, ஜன்
மகேதி, சுமணேபனே - வியாபுனி
ஜகதா, தும்ஹி அனந்தா - பஹுவித
ரூபே, கேலிகேலி, பரீ அந்தி, பிர
ம்ம ஏகலே "

என்று பாடியபடி, ஆதியில் கிளம்பிய ஓரே ஒரு மூல அணுதான் இப்போது கணக்கிலெழுதத் தொலையாத ஜீவன்களாக மாறிவிட்டது. அப்படி முதலில் கிளம்பி வந்த அணுவை பரமாத்மா என்று சொல்லலாம். அப்பரமாத்மா, உலோகம், தாவரம், மிருகம் ஆகிய மூன்று பெரும் பகுதிகளில், மேல்மேல் விருத்தியுற்று வரவும் அப்போதைக்கப்போது அதனால் உருவடைந்த ஜீவராசிகளெல்லாம் தம்தம் இனத்தை நிலை நிறுத்திக் கொண்டு அதனதன் விருத்திக்கு பிராரம்பித்தது. இப்படி அப்பரமாத்மாவுக்கு மேல் கதிகளில் ஏற்பட்ட அநுபவ ஆவியே ஜீவாத்மா என்ற பெயர் வகித்தது. எதுமறியாது நிஷ்கபடனாக இருக்கும் ஒருவனை "பரமாத்மா" என்று சொல்லுவது உலக வழக்கம். இதிலிருந்தே பரமாத்மாவின் லக்ஷணத்தை ஒருவாறு அறிய முடியும். பரமாத்மா சிருஷ்டித்தல் என்ற ஓரே காரியத்தில் ஈடுபட்டது. ஜீவாத்மாவோ

வென்றால் வாழ்வின் அனுபவக் களஞ்சியமாக விளங்குவதுடன் பிறப்புக்கு ஆஸ்பதமாகவும் இருக்கிறது. பரமாத்மாவின் பரமாணுக்கள் ஒன்று சேர்ந்து இறுகி உலோகங்களாகின. இவ்விதம் உலோகங்களில் அடங்கிய பரமாத்மா மேல் கிளம்பி வந்ததுதான் தாவர வர்க்கம். தாவரங்கள் இருந்த இடத்திலிருந்தே மேல்நோக்கி வளர்வதால் உண்டான ஜீவ அனுபவமே பரமாத்மாவிடம் ஜீவாத்மாவாக உருப்பெற ஆரம்பித்தது. அப்படித் தாவரங்களில் முதல் முதல் தோன்ற ஆரம்பித்த ஜீவாத்மா மரங்களில் சிறந்ததாகிய மா (மாவென்றால் பெருமை வாய்ந்ததல்லவா?) மரத்துக் கனியில் பரமாத்மாவினின்று வண்டு சொரூபத்தில் ரீங்கார சப்தத்துடன் பறந்து செல்ல ஆரம்பித்ததுபோலும். அதுமுதல் தோன்றிய மிருகவர்க்கங்களுக்குக் காம உணர்ச்சி, ஓசை, இடப்பெயர்ச்சி முதலிய லக்ஷணங்கள் தோன்றி நிலை பெற்றதாகத் தெரிகிறது. ஜீவ அனுபவத்தால், அனுபவ ஆவியாக மாறிப்பரமாத்மாவிடமிருந்து அதிநுட்பமாகப் பிரிந்து வந்ததுதான் ஜீவாத்மாக்களில் காம உணர்ச்சியாகப் பரிணமித்து. இவ்விதம் மிருகங்களில் தோன்றிய காம உணர்ச்சி மனிதனிடத்தில் அன்புருவாக மாறியதுபோலும். தாவரங்களுக்கு இடப்பெயர்ச்சி கிடையாது. மிருகங்களுக்கு அச்சக்தி உண்டு. மனிதன் அச்சக்தியைக் இயற்கையைக் காட்டிலும் பதின் மடங்கு தன் முயற்சியால் பெருக்கி, ஆகாய விமானங்கள் முதலிய சாதனங்களைக்கொண்டு வெகு தூரம் விரைவில் செல்ல ஆரம்பித்து விட்டான். தாவரத்திற்குக் குரலோசை கிடையாது. மிருகத்தினிடம் துன்பத்தில் அலறும் சப்தம்மட்டும் விசேஷமாகத் தென்படுகிறது. மனிதனிடம் பல வித உணர்ச்சிகளை வின்னியாசப்படுத்தி வெளிக்காட்டக்கூடிய நாதசக்தி வாய்ந்திருக்கிறது. செடிகளுக்கும் உயிருண்டு, அவைகள் பலவித உயிர் உணர்ச்சிகளை அடைகின்றன என்று தற்கால சாஸ்திரிகளும் சொல்லுகிறார்கள். ஒரு செடியின் இலையைக் கிள்ளினால் அச்செடி முழுவதும் மிகச் சிறிய அளவில் சுருங்கி மீளுகிறது. இத்தகைய சுணக்கம் அது அடையும் கஷ்டத்தைக்காட்டுகிறது. அதை ஒரு பூதக் கண்ணாடி மூலமாகத்தான் நாம் பார்க்க முடியும். ஆனால் அக்கஷ்டத்தை வாய்விட்டு அலறிக்காட்ட அதனால் இயலவில்லை. உலோகங்களுக்கும் உயிருண்டு என்று ப்ரொபசர் பான்ஸ்கிரோன் (ரேபின்ஸ்), ஸர் ஜகதீஷ் சந்திரபோஸ் (வங்காளம்) முதலிய சாஸ்திரிகள் நிரூபித்திருக்கிறார்கள். சில உலோகங்களை ஆக்ஸாலிட் ஆஸிட் என்ற திராவக பாஷாணத்தால் கொல்ல முயன்றால், அவைகள் படும்பாடு, தாவரங்களும், மிருகங்களும் மரண அவஸ்தையில் படும்பாட்டை எவ்விதத்திலும் ஒத்திருக்கிறதென்று ஸர். ஜகதீஷ் சந்திரபோஸ் விளக்கிக் காட்டியிருக்கிறார். ஆனால் உலோகங்களில் பரமாத்மா ஒன்றுதான் உண்டு, ஜீவ அனுபவம் வாய்ந்த ஜீவாத்மா கிடையாதென்று நாம் மேலே கூறியிருக்கிறோம். அதையொட்டிக் கவனிக்குங்கால் ஜீவஹிம்சை என்பது தாவரங்களிலிருந்து ஆரம்பிப்பதாகக் கொள்ளலாம்.

ஊனைத் தின்று ஊனை வளர்த்தல்

சிருஷ்டி கருமத்தைக் கூர்ந்து ஆராய்ந்தால், குறைவற்றதும் பரிபூரணமானதுமாகிய ஒரு நிலையில் தன்னைத் தானே சமைத்துக் கொள்ளவேண்டும் என்ற நோக்கத்துடனேயே சிருஷ்டியானது அப்போதைக் கப்போது ஏற்படும் குறைகளை நிவர்த்தித்துக் கொள்ளும் ரீதியில் மேல் மேல் விருத்தியுற்று மனிதப் பிறவி வரையில் வந்துவிட்டது என்பதை உணரலாம். இனி மனிதனுக்குப் பின் சிருஷ்டியின் கதி என்ன? அது ஒரு பூர்த்தியையடையும் வரையில் அதற்கு ஓய்வே கிடையாது. மனிதன் ஆத்மா, புத்தி, மனஸ் முதலிய அகக் கருவிகளோடும் பஞ்சேந்திரியங்கள் முதலிய புறக்கருவிகளோடும் சிறந்து விளங்கினாலும், அவனுக்கும் குறைகளிருக்கின்றன. சுதந்திர வாழ்வும், சாஸ்வத நிலையுமில்லாமலிருப்பதே மனிதனின் தற்போதைய குறை.

செவிடனுக்கு இசை விருந்து போலவும், குருடனுக்குக் கண்காக்ஷி போலவுமாகும் மனிதனுக்கு சுதந்திரமற்ற சாஸ்வத நிலை. அடிப்படையாகவே மனிதன் 'பசி' என்ற கொடிய அரக்கனிடம் அடிமைப் பட்டிருக்கிறான். பசிப்பிணி என்று அக லுமோ அன்றுதான் மனிதன் சுதந்திர மாக வாழ முடியும். பசிப்பிணி அகன் றால் அதனிடமாகத் தோன்றும் மற் றைப் பிணிகளும் நீங்கும். அப்பிணி யானது பிறவிப் பிணியாகவும், பரம் பரைப் பிணியாகவும் இருந்து வரு கிறது. அப்பிணியின் அவஸ்தையை தவிர்ப்பதற்காக நாம் ' ஆகாரம் ' என்ற மருந்தினால் வயிற்றைக் கழுவி வரு கிறோம். ஆனால் இம்மருந்து அப்பிணியை முற்றிலும் அகற்றியபாடில்லை ; தற்கால சாந்தியாகவே இருந்து வருகிறது. அப் படி அனேக காலமாக அப்பிணிக்கு இட்டுவரும் ' ஆகாரம் ' என்ற மருந்தின் வேகம் ' ருசி 'யாக நாக்கில் உறைந்து கிடக்கின்றது. அப்பிணியை அடியோடு ஒழிப்பதுதான் ஜீவகாருண்யத்தின் தத் துவமாகும். கும்பகோணம் எனும் குடந் தை க்ஷேத்திரத்தில் கீழ் டபீர் தெரு வில் ஒரு யோகாலயம் நடைபெற்று வரு கிறது. அதை 1910-ம் ஆண்டில் ஆரம் பித்த குருநாதனை மாஸ்டர் C. V. V. என்று அழைப்பது வழக்கம். தன் யோகத்துக்குப் பிருக்த ரஹித தாரக ராஜ யோகம் என்று பெயரிட்டிருக்கிறார். மனிதனாய்ப் பிறந்த எவனும் அவர் சிஷ்ய னாகலாம். ஆனால் புலால் உண்பதை அவர் தடுத்திருக்கிறார். சீடர்கச் சேர விரும்பு பவர்களை ஆசனாதிகள், ஜபதபங்கள், மந் திர தந்திரங்கள், மாமிச பக்ஷணம் இவை களை விட்டுவிடும்படி அவர் கேட்டுக் கொள்வது வழக்கம். அவர் யோகத்தில் உயர் குலத்தோரும், கீழ் குலத்தோரும், பணக்காரர்களும், ஏழைகளும், படித்த வர்களும், கையெழுத்து மட்டும் போடத் தெரிந்தோர்களும் ஈடுபட்டிருக்கிறார்கள். இம்மஹான் ஜீவகாருண்யத்தின் உட் பொருளை நன்குணர்ந்து உயிருள்ள எந்த உடலையும் எக்காரணத்தைக் கொண்டும் துன்புறுத்தக் கூடாதென்ற தெளிவு அடைந்தவர். யோகம் செய்பவன் தன் உடலையும் பாதுகாக்க வேண்டும், மற்ற உயிர் ராசிகளிடத்தும் அன்பு காட்ட வேண்டுமென்ற கொள்கை இந்தியர்களுக் குப் புதுமையல்ல. அன்பே சிவம், அஹிம்ஸா பரமோ தர்மஹ, காயமழிந் தால் யோகமில்லை ஞானமில்லை, சரீர மாத்யம் கலுதர்ம சாதனம், என்றெல் லாம் நமது முன்னோர்கள் கூறியிருக் கிறார்கள். மாஸ்டர் C. V. V.யின் சிஷ்ய னொருவன் மாமிச பக்ஷண வழக்கத்தை விடுவது சாத்யமில்லையே என்று வருத் தப்பட்டான். அவனை முதலில் வாரத் துக்கு ஒருமுறை, பிறகு மாதத்துக்கு ஒருமுறை, இவ்விதம் கொஞ்சம் கொஞ்ச மாக பழக்கத்தை மாற்ற முயன்றால் எண்ணம் நிறைவேறுமென்று உத்சாகப் படுத்தினார். இச்சம்பவத்தை கோழை மனதுள்ள மாமிசத்தை வழக்கமாக உண்ணும் மனிதர்களெல்லாரும் மன தில் பதிய வைத்துக் கொள்ளவேண்டும்.

ஐரோப்பாவில் 100 அல்லது 150 கிராம்ஸ் ஆல்புமென் (Albumen) ஒரு மனிதனுக்குத் தினந்தோறும் வேண்டு மென்றும் அது மாமிச பக்ஷணத்தால் தான் கிடைக்குமென்ற கொள்கை பல நாளாய்க் கூத்தாடி வந்தது. அதனாலேயே புலால் உண்ணக்கூடாதென்ற பேச்சுக்கு அங்கே காது கொடுப்போர் மிகச் சிலரே. ஆனால் சமீபத்தில் லாபர், மார்ஷோய் ஸனி முதலிய சாஸ்திரிகள் அக்கொள் கையின் தவறை நன்கு விளக்கிக் காட் டியதுடன் மாமிசபக்ஷணத்தால் பலவிதத் தீரா நோய்கள் தலைமுறை தத்துவமாக நடமாடுகின்றன என்றும் ரூபித்திருக் கிறார்கள். பிரும்மஞான சபையின் (Theosophical Society) தலைவியா யிருந்த காலஞ்சென்ற டாக்டர் அன்னி பெசண்ட் பல பிரசுரங்களில் மாமிச பக்ஷணம், மிருக பலி இவைகளை மறுக்க முடியாத காரணங்களுடன் கண்டித்திருக் கிறார்கள். வாயில்லா ஜீவன்களான மிரு கங்களைக் கொலைசெய்த பிறகு அவைகள் சூக்ஷ்ம லோகத்துக்கு (Astral world) சென்று அங்கிருந்து மனிதன்மீது சாப மிடுவதும் அதனால் மனிதவர்க்கத்துக்

கும் மிருக வர்க்கத்துக்கும் தீரா வெறுப்பு உண்டாகியிருக்கிற தென்றும் விளையாட்டுக்காக மிருகங்களை வேட்டையாடுதல், பூஷணத்துக்காக மயிரடங்கிய மிருக சட்டைகளைத் தரித்தல், இவ்வித அப்பியாசங்களின் இழிவை அவ்வம்மையார் வெகு அழகாக எடுத்துக் காட்டி இருக்கிறாள். ஸ்ரீமான் கே.எஸ். வெங்கட்ரமணியும் "சம்புவுடன் ஒரு தினம்" (A day with Sambu) என்ற புத்தகத்தில் சாக பக்ஷணம் ஒன்றே நாகரிக அறிகுறி என்றும் இயற்கை மாதா அக்கொள்கையையே பாராட்டுகிறாளென்றும்நமதுஹிருதயத்தில் தைக்கும்படி விளக்கியிருக்கிறார்.

கீரை காய் கிழங்குகள் இவற்றில் உயிரில்லையா, அவற்றைத் தின்பது ஜீவஹிம்சையாகாதோ, என்று வாதாடுகிறார்கள். ஆம், அவற்றுள்ளும் ஜீவாத்மாயிருக்கிறது. அதை நாம் நன்குணர வேண்டும். மனிதன், மாமிச பக்ஷிணியாயிருந்தாலும் சரி, சாகபக்ஷிணியா யிருந்தாலும் சரி, ஜீவஹிம்சை செய்கிறானென்றால் அவன் அஹிம்சாமுறையில் எப்படிப் பிழைத்திருக்க முடியும்? இக்கேள்வியை தீர ஆலோசிக்குமிடத்தில்தான் உண்மைகளுக்கெல்லாம் உண்மையாய்த் தொக்கி நிற்கும் ஜீவகாருண்ய யோகத்தின் தாத்பர்யம் புலப்பட ஆரம்பிக்கிறது.

பசியின் கொடுமை

பசி வந்தால் மானம் குலம் கல்வி முதலிய பத்தும் பறந்து போமென்று கேட்டிருப்பீர்கள். உலோகத்தினின்று தோன்றிய தாவரம், உலோகத்தையும், மிருகங்களிலிருந்து தோன்றிய மனிதன் மிருகங்களையும், வதைசெய்து உயிர் வாழவது, தன்னைப் பெற்றெடுத்த அன்னையைக் கொன்று ஜீவிப்பதுபோல் தோன்றுகிறதல்லவா? இப்பாபகர்மத்தைபசிப்பிணியாலன்றோ ஜீவராசிகள் செய்கின்றன.

தாவர வர்க்கத்தினிடம் தோன்றிய மிருக வர்க்கங்களில் தனிவுருவடைந்த ஜீவாத்மாக்களுக்குப் பரமாத்மாவானது தாவரங்களையே ஆகாரமாக்க் கொடுத்து ரக்ஷித்தன் என்றாலும் சிருஷ்டியில் இராக்ஷசவர்க்கமென்றும், சாத்வீகவர்க்கமென்றும் இரண்டு வகைகள் இணையாகத் தோன்றி யிருப்பது கவனிக்கவேண்டிய அற்புதம். இராக்ஷசவர்க்கம் மாமிச பக்ஷிணியாகவும், சாத்வீகவர்க்கம் சாக பக்ஷிணி யாகவும் இருக்கிறது. தாவரங்களிலும் சில சிறு மீன்களையும் பூச்சிகளையும் கவ்வி இழுத்து உண்டு வாழ்வதை இயற்கையில் காணலாம். ஆதலால் ராக்ஷஸ குணம் மனிதன், மிருகம், தாவரம் இந்த மூன்று ராசிகளிலேயும் புகுந்திருக்கிறதென்றே சொல்லலாம். புராணங்களில் கோரப்பற்களும் கூரிய நகங்களும் பயங்கர ரூபங்களும் வாய்ந்த ராக்ஷஸர்கள் மனிதனையும் மிருகத்தையும் அடித்துத் தின்றதாகக் கூறப்பட்டுள்ளது. இன்றும் மனிதனைத் தின்னும் மனிதன் (Canibal) பூமியில் நாகரிகம் பரவாத சில இடங்களில் தென்படுகிறான். தற்சமயம் நடக்கும் சண்டையில் ஈடுபட்டிருக்கும் நாகரிக மனிதனின்நடையுடை பாவனையைக் கவனிக்குங்கால், ராக்ஷஸ குணம் மனித சமுதாயத்தில் தற்சமயம் கொழுந்துவிட்டெரிகிற தென்றே சொல்லவேண்டும். ஸ்ரீ ராமபிரான் காலத்திலும் மஹாபாரத யுத்தத்திலும் ராக்ஷஸர்கள் பெருவாரியாக அழிக்கப்பட்டார்களாம். ஊனைத்தின்று ஊனைப் பெருக்கும் இரக்கமற்ற அரக்கர் வாய்ந்த இலங்கையில் திருசடை என்ற நல்லாள் தோன்றி புலால் உணவை அறவே ஒழித்திருந்தாளாம். இக்கதைகளைக் கேட்டதினால் அடைந்த பயன் யாதோ தெரியவில்லை. மாமிசத்தைப் பச்சையாகத் தின்பதற்கு ஏதுவான கோரைப் பற்களும் கூரிய நகங்களும் மனித உருவத்தினின்றும் இயற்கை மாதா அகற்றிவிட்ட போதிலும், ஆடு மாடுகளை அடித்துத் தின்னும் புலி, சிங்கம் முதலிய துஷ்ட மிருகங்களைப்போல் மனிதன் இன்னும் நடந்து வருகிறானே. அவன் குரூரம் மிருகத் தன்மையையும் அதிக்கிரமித்து நிற்கின்றதே. இது நல்லது, இது கெட்டது; இது தர்மம், இது அதர்மம் என்று உணரவல்ல விசேஷ பகுத்தறிவை மனிதன் அடைந்திருக்கிறான். ஆதலால் அவன் ஜீவஹிம்சை செய்வது [illegible]

அவ்வித அறிவு விசேஷமாகப் பெற்றிராத மிருகங்கள் "அழித்தல்" என்ற காரியத்தில் ஈடுபட்டிருப்பதில் ஆச்சரியமில்லை. "பாதுகாத்தல்" என்ற தர்மத்தை நடத்துவதில் மனித உதவியை சுலபமாக நாடக்கூடும். அவ்விதமின்றி "அழித்தல்" தர்மத்தில் நானும் ஈடுபடுகிறேன் என்று மனிதன் முன் வந்தால் அவனுக்கு அளித்திருக்கும் ஞானம் விருதாவாகப் போகுமன்றோ? விலங்கினத்துக்கும் மற்ற உயிர்களுக்கும் நாம் இடர் செய்யக் கூடாதென்பதை இன்னும் பல காரணங்களாலும் ஸ்தாபிக்க முடியும். வேதநாயகம் பிள்ளை நீதி நூலிலுள்ள கீழ்க்கண்ட கவிகள் ஜீவகாருண்யத்தின் பெருமையை மிகச் சிறப்பாகவும் உருக்கமாகவும் சொல்லுகின்றன :—

"மானிடர் அயரைச் சொல்வர்,
மற்றுளோர் அதனைத் தீர்ப்பர்
ஆனவர் உறுநோய் நீக்க
ஆனந்தமாம் பரிகா ரங்கள் ;
மோனமாய் இடுகண் தாங்கி
முறையிட அறியா(து) அல்லல்
தானுறு விலங்கைக் கொல்வோன்
தருமனோ, பேயோ? அம்மா.

கொடியவெவ் விலங்கை எல்லாம்
கோறலே முறைஎன் றூலும்
அடிமைபோல் நரர்க்கு ழைத்தீண்
டயர்விலங் கினைமா சில்லாக்
குடிகளையை அடித்து தைத்துக்
கொன் றுண்போர், சமயம் வாய்க்கில்,
படியின்மாக் களையும் உண்பர் ;
பழக்கம் போல்தீய துண்டோ?

ஊமரைப், பித்துளாரை, உணர்வில்
சேயரை, மின் னுரைப்
பாமரர் தம்மை, மிக்கபரி
வோடுங் காத்தல் போல,
நாமற விலங்கைக் காப்பர்
நல்லவர், அதை வருத்தும்
தீமனம் உடையோர் துன்பம்
செய்வர்மா னிடர்க்கும் அம்மா.

தன் கஷ்டத்தைக் குரலிட்டு வெளியிடக் கூடிய மிருகங்களிடம் கருணை காட்டுவது முதல்படி. எல்லா மிருகங்களிடம் கருணை காட்டுவது இரண்டாம் படி. எல்லா மிருகங்களிடமும் தாவரங்களிடமும் கருணை காட்டுவது மூன்றாம் படி. உலோகங்கள் உள்பட எல்லா ஜீவராசிகளிடமும் கருணை காட்டுவது நாலாம்படி. இவ்விதம் படிப்படியாய் மேலேறி ஜீவகாருண்ய யோகத்தின் பரிபூர்ண சித்தியை அடையவேண்டும். முதல்படியை ஏறுவது எம்மனிதனாலும் இப்பொழுதே முடியும். அதற்கு வேண்டிய ஞானசக்தி நம்மிடமிருக்கிறதை மறுக்கமுடியாது. மற்றப்படிகளையும் ஏற வேண்டுமென்றால் தற்சமயம் நம்மிடமிருக்கும் சக்தி போதாது. பசியை முற்றிலும் அகற்றவல்ல சக்தி நமக்கு உண்டாகும் வரையில் முதல்படி யேறுவதே நமக்கோர் மோக்ஷம். ஆனால் தாருண வருஷம் மாசி மாதம் முதல்தேதி கலியுகம் மாறி துவாபர யுகம் ஆரம்பிக்கும். அதையொட்டி ஒரு பெரிய தூமகேது (Comet) தோன்றி அதன் வாலால் பூமியைத் தொட்டு அபரிமித நூதன ஆவிச் சத்துக்களைக் கொட்டும். அதன் பயனாக மனித உடல் அமைப்பு மாறும். அழுக்கு ஜலம் நிரம்பிய அண்டாவில் ஜலம் நிறைந்தே இருக்கவேண்டும், அதிலிருக்கும் ஜலத்தைக் கீழே கொட்டக்கூடாது, ஆனால் அழுக்குமட்டும் நீங்கவேண்டுமென்றால், இக்காரியத்தை செய்து முடிப்பதெவ்வாறு? மேலே ஒரு குழாய் வைத்துத் தூய ஜலத்தை தாரகமாய்க் கொட்டினால், அண்டாவிலுள்ள அழுக்கு ஜலம் அவ்வளவும் கொஞ்சம் கொஞ்சமாய் வழிந்தோடும். கடைசியில் தூய ஜலமே அண்டாவை நிரப்பி நிற்குமல்லவா? அதுபோலவே ஜீவகாருண்ய மென்ற ஞானசக்தி, கர்மா நிறைந்த மனித உடலில் தூமகேது வாயிலாய்த் தாரகமாய்க் கொட்டப்பெற்று அவ்வுடல் பரிசுத்தமாகிறது. இப்பொழுது நடக்கும் சுவேதவராக கல்பத்தை, சுவேதவர் ஆக கல்பம் என்று பிரித்தால், மனித சமுதாயம் பரிசுத்த உடலைப் பெற்று அளவற்ற உயிருடன் இம்மண்ணுலகிலேயே அமரபதத்தை அடைவதே இக்கல்பத்தின்நோக்கமென்றும், இவ்வேலை பூர்த்தியானதும் கல்பம் மாறி பிரம்ம கல்பமென்பது ஆரம்பிக்கு மென்றும் தெரியவருகிற தல்லவா? மேற்சொன்ன

ஞான அன்பு நமது உடலில், பாயப் பாய இதயத் தாமரை மலர்ந்து விரிந்து, அக ஒளிபெற்று, பசி பிணி முதலிய அழுக்குகள் விலகி, சாஸ்வத நிலையும் உண்மையான சுதந்திர வாழ்க்கையும் நம்மைத் தானே வந்தடையும். ஆதலால் மாமிச உணவை முதலில் அகற்ற நாம் இப்பொழுதிருந்தே முயலுவோமானால் பிரம்ம ஞானமும் சத்தியம் நமக்குப் பரி பூர்ணமாய்க் கிடைக்கும் யோக்யதையை சீக்கிரம் சம்பாதித்துக்கொள்ள முடியும்.

சிருஷ்டியின் முன்னிலை

சிருஷ்டி லீலா நாடகத்தை ஒருவாறு எடுத்துரைத்தோம். பிரமாண்ட உருவுடைய ஆலமரமெங்கே, சிறிய அளவுள்ள புல்லெங்கே! உருண்டுருண்டு செல்லும் புழுவெங்கே, ஆகாய விமானத்தில் பறக்கும் மனிதனெங்கே! ஆதியில் கிளம்பிய ஒரே அணுதான் இவ்வளவு ரூபங்களாக மாறியிருக்கிறது. மனிதனிடம் அனுபவம் மிகுந்து விளங்கும் ஜீவாத்மா கீழ் பிறவிகளிலிருந்து விருத்தியுற்று வந்ததென்பதை பின்வருமாறுவிளக்கலாம்:—

(1) உலோக வர்க்கம்: பரமாத்மா 1 பங்கு, ஜீவாத்மா 0, பரமாத்மாவின் பரம அணுக்கள் ஒன்று சேர்ந்து இருகிக் கல் முதல் தங்கம் வரையில் வியாபித்தது. ஜீவாத்மா உற்பத்தியாகவில்லை.

(2) தாவர வர்க்கம்: பரமாத்மா 1பங்கு ஜீவாத்மா $\frac{1}{4}$ பங்கு. தாவரங்களில் பரமாத்மா இடப்பெயர்ச்சியின்றி மேல் நோக்கி வளர்ந்ததால் ஜீவாத்மா தோன்ற ஆரம்பித்து, அது வளர்தல் என்ற ஓர் அறிவையே படைத்திருந்தது. புல்முதல் மரம் வரையில் வியாபித்தது.

(3) மிருகவர்க்கம்: பர்மாத்மா 1 பங்கு, ஜீவாத்மா $\frac{1}{2}$ பங்கு. பரமாத்மாவிற்கு இடப்பெயர்ச்சிஏற்பட்டது. ஜீவாத்மாவும் பரமாத்மாவிடமிருந்து பிரிந்தது. காம உணர்ச்சிகுரலோசைமுதலிய அம்ஸங்கள் உண்டாகி புழுமுதல் விருத்தியுற்றுஐயறிவுடன் குரங்கு வரையில்வியாபித்தது.

(4) மனித வர்க்கம்: பரமாத்மா 1 பங்கு, ஜீவாத்மா $\frac{3}{4}$ பங்கு. பகுத்தறிவு என்ற ஆறுவது அறிவு விசேஷமாகக் தொடப்பட்டது.

(5) அமரவர்க்கம்: பரமாத்மா 1 பங்கு, ஜீவாத்மா 1பங்கு. தற்போதைய மனிதன் இனி சுதந்திர வாழ்வையும் சாச்வத நிலையையும் இம்மண்ணுலகிலேயே பெற்றால், ஜீவாத்மா முழு பரிணமிப்பையும்பெற்று, பரமாத்மாவுடன் ஒன்றாகக்கலந்து பிரம்ம துல்யம் என்ற மோக்ஷத்தை அடையும். சிருஷ்டி தர்மமும் பூர்த்தியடையும்.

இவ்வித சிருஷ்டி கிரமத்தை ஆராயும் கால ஆறறிவு படைத்து அதற்கும் மேலான அமரபதத்தை அடையும் தருவாயில் நிற்கும் மனிதன் எறும்பு கடித்தால் அலறுகிறான், உயிர் பிராணிகளைக் கத்திபோட்டு அறுக்கிறான் என்ற விபரீதக் காட்சி மாயமோ என்று நினைக்க வேண்டியிருக்கிறது. உயிர்கள் வெளியிலே வேற்றுமைப்பட்டிருந்தாலும் உள்ளே ஒற்றுமைப்பட்டிருக்கிறது. எந்த ஜீவனும் கஷ்டத்தை அகற்றிச் சுகத்தை நிலை நிறுத்தவே பாடுபடுகிறது. எவ்வுயிரிடத்திலும் அன்புருவான நம் பரமன் வாழ்கிறான். நம்மைக் கொல்ல வரும் புலியினிடமும், நம்மைக் கெடுக்க நினைக்கும் பகைவனிடமும் அப்பரமன் வாழ்கிறான்.

"கொல்லான் புலால் மறுத்தான் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்"

என்ற தமிழ் வேதம் இனியாகிலும் நமது காதில் வந்து பாயட்டும்.

அமிர்தாஞ்சன் லிமிடெட்

மதராஸ்

பொன் விழா ஞாபகார்த்தமாய் தங்கள் அன்பு மிக்க

ஆசி மொழிகளை எங்களுக்கு அனுப்ப வேண்டுகின்றோம்

அமிர்தாஞ்சன் லிமிடெட்

7, தம்பு செட்டி தெரு, மதராஸ்

The Vanguard Insurance Company Ltd.

H. O. 308/309, Linghi Chetty Street, G. T. Madras

POINTERS OF PROGRESS

- Lowest Expense Ratio
- Highest Bonus Possibilities
- Cent per cent Security to Policy-holders
- Excellent terms to Field Workers
- Decent return to Share holders

See whether we satisfy all these requirements. If you are satisfied, Tell others. If not, Tell us.

Total Investments in Government and other Approved Securities : Rs. 4 lakhs.

H. D. RAJAH,

General Manager.

ஸன்லைட் சோப் தயாரிக்கும் ரசாயனசாலையில் வேலை செய்யும் ஒருவர் சொல்லுகிறார் . . .

“ஆடைகளைக் காப்பாற்றுமா”? அதுதான் சன்லைட் சோப் நுரையின் முக்கிய வேலை. அழுக்கடைந்த ஆடைகளிலிருந்து அழுக்கை தானாகவே எடுக்கக் கூடிய சக்தியுடையது. வஸ்திரங்களை கல்லின் மேல் அடித்து துவைக்க வேண்டியதில்லை. ஆகையால் ஆடைகள் நைந்து போகாது. சுயமாக வெளுக்கும் நுரையிலுள்ள சுயசக்தியானது அழுக்கை நன்றாக கரைத்துவிட்டு ஜலத்தில் ஆடைகளை அலசினவுடன் அழுக்கைப் போக்கிவிடுகிறது.”

ஸன்லைட் சோப்

சுயமாக வெளுக்கும் நுரை உடையது

S. 67-33 TM

ஒரு லீவர் பிரதர்ஸ் தயாரிப்பு

ரிடாவின் தியாகம்

[பாசரசு]

சுவரில் மாட்டியிருந்த கடிகாரம் 'டாங் டாங்' கென்று பன்னிரண்டு அடித்தது. பூர்ண சந்திரன். எங்கும் நிசப்தம். இந்த நிசப்தத்தைக் கெடுத்தது இந்தக் கடிகாரம். மேலும் கடிகாரம் 'டக்டக்'கென்று ஓயாமல் சத்தம் செய்துகொண்டிருந்தது. எங்கோ தூக்கம் கலைந்த ஒரு காகம் மணிக்கு ஒரு தரம் 'கா' வென்று கரைந்தது. அப்பொழுதுதான் சினிமா கடைசி காட்சி முடிந்திருக்க வேண்டும். வெகுதூரத்தில் தெரு நாய்கள் சினிமாவிலிருந்து திரும்பும் ஜனங்களைக் கண்டு குரைக்கும் சத்தம். வரவா ஜனங்கள் தெருக்களில் சினிமா நடிகர் சிலரை நிந்தித்தும், சிலரைப் பரிகசித்தும் பேசும் பேச்சு. பாதையோரமாகச் செல்லாமல் ஒருவன் வீதி நடுவில் சென்றதால் ஒரு காரின் எலெக்டிரிக் ஹார்ன் வீரிட்டுக் கத்தும் சத்தம். அதை அடுத்து பிரேக்குகளால் காரை நிறுத்தும் சத்தம். ட்ரைவர் வழிப்போக்கனின் காதுகளை பழிக்கும் வார்த்தைகள். இது போன்ற பலவிதமான சத்தங்கள் இப்பொழுது அடங்கி விட்டது. சுமதி வீட்டுக் கடிகாரம்மட்டும் ஓயாமல் சத்தம் செய்துகொண்டிருந்தது. கடிகாரம் மாட்டியிருந்த அதே சுவரில் கடிகாரத்திற்கருகே விளக்கு ஒன்று மங்கலாக எரிந்துகொண்டிருந்தது. விளக்கைச் சுற்றி சில பூச்சிகள். பூச்சிகள் ஏமாறும்பொழுது அவைகளை உண்பதற்கு தயாராக இருக்கும் ஒரே பல்லி நிஷ்டையிலிருப்பது போல் பாசாங்கு செய்துகொண்டிருந்தது. பூச்சிகள் அதிகமாகத் தன் வலையில் விழவில்லையே என்று பல்லியின் மனம் ஏங்கியிருந்தது. சுமதியின் உள்ளமோ, தன் கணவன் இன்னொருத்தி வலையில் விழுந்து விட்டாரோ என்று துடித்துக்கொண்டிருந்தது.

சுமதி விளக்கை எடுத்துக் கடிகாரத்திற்கெதிரே பிடித்து மணியென்னவென்று பார்த்தாள். மணி ஒன்றாயிற்று. அவர் இன்னும் திரும்பவில்லை. சுமதி மாடியின் முன்புறமிருந்த ஜன்னல் வழியாக எதிர்வீட்டு மாடியின் ஜன்னல் வழியாக அன்றைக்கு இருபத்தோராவது தடவையாகப் பார்த்தாள். எதிர் வீட்டு ஜன்னலில் திரை விட்டிருந்தது. ஜன்னலுக்கப்பால் நடக்கிறது இன்னதென்று சுமதியின் கண்ணுக்குத் தெரியவில்லை. தன் கணவன் மோஹன் எதிர் வீட்டு மாடி அறையில் இருக்கிறார் என்பது மாத்திரம் அவளுக்குத் தெரியும். அதே அறையில் 'ரிடா' என்னும் ஆங்கில இந்தியப் பெண் இருக்கிறாள் என்பதும் சுமதிக்குத் தெரியும். அவருக்கு ரிடா விடத்தில் என்ன ஜோலி என்பதுதான் விளங்கவில்லை. அதைப்பற்றித் தன் கணவனைக் கேட்கவும் அவளுக்குப் பயம். இந்த சந்தர்ப்பத்தில்தான் மாடி ஜன்னல் வழியாக எதிர்வீட்டை நோக்கிக்கொண்டிருந்தவள், அந்த வீட்டில் தினம் நடக்கும் சம்பவம் இன்னதென்று மனதில் கற்பனை செய்யும்படி நேரிட்டிருக்கவேண்டும்—மோஹன் ரிடாவின் அருகே வருகிறார்....ரிடா அவர் முகத்தைத் தன் கரங்களால் அணைத்துக் கொள்ளுகிறாள். அவர்களுடைய உதடுகள் சந்திக்கின்றன—இதுவே சுமதியின் கற்பனை. உடனே சுமதியின் கண்களில் கண்ணீர்ப் பிரவாகம் எடுத்து கன்னங்களில் வழியத் தொடங்கியது.

அவள் இன்னும் சாப்பிடவில்லை. கணவன் சாப்பிட்ட பிறகல்லவோ சுமதி சாப்பிடுவாள். நாழி ஆக ஆக சுமதி தேம்பித் தேம்பி அழவாரம்பித்துவிட்டாள். இது நடந்தது இன்று நேற்றல்ல, ஒரு மாதமாக நடக்கிறது.

சுமதியைக் காதலித்துதான் மோஹன் அவளை மணந்தார். அவருக்கு மனைவியிடம் அந்தியந்தப் ப்ரேமை. சில வேளைகளில் அவருக்கு ஆபீஸில் வேலைமீது கூட மனம் செல்வதில்லை. எப்பொழுதும் சுமதியின் நினைவேதான். மாலையில் வீடு திரும்பும் நேரம் வந்துவிட்டதா வென்று கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டேயிருப்பார். யாரிடம் பேசினாலும் தன் சுமதியின் சாதூர்யத்தைப் பற்றியும் அவள் அழகைப்பற்றியும் ஒரு வார்த்தை சொல்லாமலிருக்கமாட்டார். சதா சுமதியை மனதில் அலங்காரமாக வைத்துக்கொண்டு திரிந்தார். வீட்டிற்கு வந்த பிறகு, சுமதி சமையலறையிலிருந்தால் இவரும் சமையலறையில் தான் இருப்பார். இதனால் வீட்டு வேலைகள் இரட்டிப்பதுண்டு. சதிபதிகளிருவரும் சந்தோஷமாக விளையாடிக் கொண்டே சமையலை முடிப்பார்கள். பால் பொங்கிவிடும், காய்கறிகள் கரிந்து போகும். சுருங்கச் சொல்லில் மோஹன் சுமதியை ஒரு தெய்வமாகப் பாவித்தார்.

இரண்டு மாதங்களுக்கு முன் எதிர் வீட்டில் ரீடா குடித்தனம் வந்தாள். அதற்கு முன் ரீடாவை மோஹன் பார்த்தது கிடையாது. மோஹனுக்கு சங்கீதப் பைத்தியம் அதிகம். சதா கிராமபோன் போட்டுக்கொண்டிருப்பார். ரீடாவும் ஒரு கிராமபோன் கொண்டு வந்திருந்தாள். ஒரு நாள் சுமதி வீட்டிற்கு விருந்தாளிகள் வந்திருந்தபோது வீட்டில் கிராமபோன் ஊசி இல்லாமல் போயிற்று. சுமதி மோஹன் ரீடாவைக் கேட்டுக் கொஞ்சம் ஊசி வாங்கி வரச் சொன்னாள். அன்று தான் மோஹன் ரீடாவிடம் நெருங்கியது. அவர் எப்படி ஊசி கேட்டாரோ அங்கு என்ன நடந்ததோ சுமதிக்குத் தெரியாது. ஊசிகளோடு சீக்கிரமாகவே திரும்பினார். மறுநாள் வீட்டிலுள்ள கிராமபோன் ரிகார்டுகளில் சிலவற்றை எடுத்துச் சென்று ரீடாவிடம் கொடுத்தார். ரீடாவுக்கு ஆங்கில ரிகார்டுகள் தவிர வேறு பாஷை ரிகார்டுகள் பிடிக்காது என்று அதிக பரிவுடன் சொல்லி அவைகளைத் திருப்பி விட்டாள்.

இது நடந்த மறுமாதம் முதல் தேதியன்று மோஹன் ஆபீஸிலிருந்து திரும்பியபோது கையில் ஒரு சிறு பெட்டியுடன் வந்தார்.

“ஏது எம். எஸ். ரிகார்டுகள் கேட்டேனே வாங்கி வந்துவிட்டீர்களா?.... ‘கண்டதுண்டோ கண்ணன் போல்’ ....அதை வாங்கி வந்தீர்களா?” என்று ஆவலோடு சுமதி கேட்டாள். மோஹன் பதிலளிக்கவில்லை. “என்ன கானு ராம பஜனை’ என்று....ஏதோ புதுசா எம். எஸ். ரிகார்டு வந்திருக்காமே அது வாங்கி வந்தேளா?” என்று மறுபடியும் ஆவலுடன் கேட்டாள் சுமதி.

“சுமதி, இதோ பார், சுத்தப் பட்டிக்காடுமாதிரி பேசாதே. இனிமேல் நான் எம். எஸ்., கிம். எஸ்., எல்லாம் வாங்கப் போகிறதில்லை. இப்போது அருமையான இருபது ரிகார்டுகள் வாங்கி வந்திருக்கிறேன். இவை ஜீனெப்மாட்டெனல்ட், ரீடாஹேவொர்த், எட்டிகாண்டர் போன்றவர்கள் பாடிய ரிகார்டுகள், அருமையென்றால் அருமை. இதோ பார் அவைகளை வைத்துக் காண்பிக்கிறேன்” என்று சொல்லி, வெளியிலிருந்து வந்தவர் கைகால் சுத்தி செய்யாமல்கூட ஆங்கில ரிகார்டு ஒன்றைக் கிராமபோனில் வைத்தார் மோஹன்.

சுமதி வேறு ஒன்றும் சொல்லவில்லை. “ஐயோ, சகிக்கலையே....” என்றுதான் சொன்னாள். அதற்குதான் மோஹனுக்கு அளவு மீறிய கோபம் வந்துவிட்டது. ஒருநாளும் அதுபோல் சொல்லாதவர், அன்று சுமதியை, “சீ, கழுதை-வாயை மூடு” என்று சொன்னார். அதே சமயம் ரீடா வீட்டிற்குள்ளே நுழைந்து, “மிஸ்டர் மோஹன், இப்பொழுது வைத்தீர்களே அந்த ஆங்கில ரிகார்டை இரவலாகக் கொடுப்பீர்களா?”என்று உடைந்த தமிழில் கேட்டாள்.

அவளைப்பார்த்ததுமே சுமதிக்குத்தனக்கென்று ஒரு யமன் அந்த உருவில் வந்திருக்கிறாளென் றறிந்தவளாய் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டாள்.

அன்று வாங்கிவந்த அவ்வளவு ஆங்கில ரிகார்டுகளையும் ரிடாவிடம் சமர்ப்பித்தார். பிறகு வெகு அவசரத்தோடு சாப்பிட்டுவிட்டு எதிர்வீட்டுக்குச் சென்றார் மோஹன்.

தினம் ரிடாவுக்காக, கேட்டுச் சகிக்கக் கூடாத ரிகார்டுகளையும் சந்தோஷத்தோடு கேட்பதுபோல் பாவனை செய்தார். தினம் இரவு ஒரு மணிக்கு, இரண்டு மணிக்கு வீடு திரும்புவார். சுமதி இரவெல்லாம் சாப்பிடாமல் விழித்துக்கொண்டு ஜன்னல் வழியாகப் பார்த்துக்கொண்டிருப்பாள்.

ரிடா முதலில் மோஹனை ஒரு நண்பராகப் பாவித்தாள். நாளடைவில் அவர்களிடையே அதிகரித்த நட்பு அவர்களைக் காதலர்களாக மாற்றியது. மோஹன் கலியாணமானவன், அவனுக்கு மனைவி ஒருத்தி இருக்கிறாள், என்னும் விஷயங்கள் ரிடாவுக்குத் தெரிந்தவையே. ஆனாலும் அவள் மோஹனைத் தன்னுடனேயே இரவில் அதிகநேரம் தங்கும்படி செய்தாள். மோஹன் இரவில் சந்தோஷமாக ரிடா வீட்டில் காலத்தைக் கழித்து வந்தார். சுமதி சாப்பிடாமலும் தூங்காமலும் ரிடா வீட்டின் ஜன்னலையே பார்த்துக்கொண்டு வந்தாள். ஜன்னல் திரைத் துணியில் எப்பொழுதாவது ரிடாவின் நிழலோ மோஹனின் நிழலோ விழும். அப்பொழுது சுமதியின் மனம் பதைபதைக்கும். ஒவ்வொரு சமயம் ரிடா மோஹன் இருவர் நிழலும் துணியில் விழும். அப்பொழுது சுமதியின் மனம் பட்ட வேதனையைச் சொல்லமுடியாது. தினம் அழுது அழுது அதன் பயனாக சுமதியின் உடல் இளைக்கவாரம்பித்தது. மேலும் அப்போது அவள் பூரண கர்ப்பிணி.

ஒருநாள் ரிடாவின் மாடி அறையில் வெளிச்சம் அதிகமாக இருந்தது. சாதாரணமாக அந்த வெளிச்சம் மோஹன் வீட்டு மாடி ஜன்னலிலும் விழவேண்டியது. ஆனால் அந்த ஜன்னலில் தொங்கியிருந்த திரைத் துணி வெளிச்சத்தைத் தடுத்துக் குறுக்கே நின்றது. அன்று அதிக புழுக்கமாகவிருந்தது. சுமதி வழக்கம்போல் ஜன்னல் அருகே நின்றுகொண்டு ரிடா வீட்டின் ஜன்னலையே பார்த்துக்கொண்டிருந்தாள். ரிடா வீட்டின் ஜன்னல் துணியில் மோஹனுடைய நிழல் விழுந்தது; அந்த நிழலில் ரிடாவின் நிழல் மறைந்துகொண்டது. காற்று இல்லாததினாலே என்னவோ ரிடா திடீரென்று ஜன்னல் துணியை விலக்கினாள். அறையிலிருந்த வெளிச்சம் சுமதியின் முகத்தில் உடனே வீசியது. சுமதியின் கண்களிலிருந்து கண்ணீர் பிரவாகமாக ஓடிக்கொண்டிருப்பதை ரிடா பார்த்துவிட்டாள். சுமதி ஜன்னலைவிட்டு விலகிவிட்டாள். மோஹன் இதையெல்லாம் கவனித்தவரல்ல. ரிடாவின் உடல் நடுக்கமுற்றது. அதைக் கண்ட மோஹன் "ஏன் உன் உடல் பதறுகிறது?" என்று கேட்டார்.

"எனக்கென்னமோ சுரம் வரும்போலிருக்கிறது" என்று சொல்லி ஜன்னல் துணியைப் பழையபடி மூடிவிட்டுப் படுக்கையில் போய்ப் படுத்துக்கொண்டாள்.

மறுநாள் காலை மோஹன் ஆபீஸுக்குச் சென்ற பிறகு ரிடா வீட்டெதிரில் ஒரு லாரி வந்து நின்றது. ரிடா வீட்டில் உள்ள சாமான்கள் அவ்வளவும் லாரியில் எற்றப்பட்டன. அன்று மாலை அந்த வீடு காலிவீடாயிற்று. அன்றிரவு மோஹன் ஐந்தாறு ஆங்கில ரிகார்டுகளுடன் வீடு திரும்பினார். வீட்டிற்குள் வந்ததும் காபி சாப்பிட்டுவிட்டு ரிகார்டுகளுடன் ரிடா வீட்டுக்குப் புறப்பட்டார். வீடு காலியாகவிருந்தது. கோபத்துடன் வீட்டுக்குவந்து கையில் வைத்திருந்த ஆங்கிலரிகார்டுகளைச் சுமதியினெதிரில் பொதாரென்று போட்டார். ரிகார்டுகள் தூள் தூளாகச் சிதறியது.

"கழுதை, உன் வேலையா இது? அவளை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டாயா?" என்று உறுமினார் மோஹன்.

"அவள் தன் பிசகை உணர்ந்து தானாகவேதான் சென்றிருக்கக் கூடாதா?...,நான் ஏன் அவளைப் போகச் சொல்லுகிறேன்?"....என்று சொல்ல வாயெடுத்தாள்.



காவிரிக் கரையில் செழித்து ஓங்கி வளர்ந்து கற்பகவிருக்ஷமென விளங்கி வரும் தென்னந்தோப்பில், மானிட வாழ்வையே சுட்டிக் காட்டும் பல காட்சிகளை, பார்க்கும் கண் பார்க்கலாம். அதற்கு அத்வைத மனோபாவமும், கவிதாயோகமும் தான் வேண்டும். சிருஷ்டியில் லயிக்கும் ஆனந்தத்தையே இதன் மூலம் பெறலாம். கட்டிலகப்பட்டும் விடுதலையின் பேரின்பத்தை பெறலாம். தென்னை நிழலுக்கும் காற்றுக்கும் வேதாந்தத்தைப் போதிக்கும் குணமுண்டு.

கண்ணைக் குளிரும் பச்சையும், மனதைக் கவரும் அடர்ந்த நிழலும், அந்த நிழலை கட்டம் போட்டுப் பொத்தவிட்டு அனுபவிக்கும் சூர்யரச்மையும், ஓயாமல் மின்சார விசிரிபோல் ஆடும் மட்டைகளும், இவைகளைப் பார்த்தால் தெய்வமே குடிகொண்டிருக்கும் இந்த சோலைகளில் நாம் ஏன் குடியிருக்கக்கூடாது என்று தோன்றும். ஆனால் மீரட்டில் (டில்லிக்கும் வடக்கு) சப்ளை டிபார்ட்மெண்டில் 40 ரூபாயில் கூலி வேலையாயிருந்தாலும், ஓரே மூச்சாய் அவ்விடம் ஓடிப்போய் நாம் அதை பொத்திக்கொண்டு விடுவோம். நல்லது, நமக்கு மணக்காது.

ஒரு தென்னந்தோப்பில் ஒரு மாதம் நாம் குடியிருந்தால்,நமக்குப் பல உண்மை

“ சீ போதும் உன் பிரசங்கம் ” என்று சொல்லிவிட்டு வெளியே புறப்பட்டுச் சென்றார்.

ரீடா போன வழியை மோஹனால் கண்டுபிடிக்க முடியவில்லை. சுமதியிடம் இப்பொழுதெல்லாம் பேசுவது கிடையாது. சுமதிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. மோஹன் குழந்தையை திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. இது சுமதியின் மனதில் தாங்கமுடியாத துக்கமாகவிருந்தது.

ஒருநாள் மாலை மோஹன் வீட்டிற்குள் வரும் காலடி சத்தம் சுமதிக்குக் கேட்டது. சுமதிக்கு ஒவ்வொருவருடைய காலடி சத்தமும் தெரியும். அவர் உள்ளே நுழையும்பொழுதே சுமதி, “ என் ரீடா கண்ணு, அப்பா வரும் நேரமாச்சு. ‘ அப்பா ’ என்று கூப்பிடு ” என்றாள்.

இதைக் கேட்டுக்கொண்டே வந்த மோஹன் “ இப்பொழுது இங்கே யார் ‘ ரீடா ’ என்று கூப்பிட்டது? ” என்று கோபத்துடன் கேட்டார்.

“ ஏன், நான்தான் கூப்பிட்டேன். உங்கள் அருமைப் பெண்ணுக்கு ரீடா என்று பெயர் வைத்திருக்கிறேன்” என்றாள் சுமதி.

அன்றுதான் பல நாட்களுக்குப் பிறகு மோஹன் சுமதியிடம் முதல் முதலாகப் பேசினார்.

“ பெயர் பொருத்தமாகத்தான் இருக்கிறது ” என்று சொல்லிவிட்டுக் கையில் குழந்தையை எடுத்து முத்தமிட்டார்.

மறுநாள் மாலை சுமதி வீட்டின் கிராமபோனிலிருந்து ‘ என்ன கானு ராம பஜனை ’ என்னும் நாதம் கிளம்பியது.

கள் புலப்படும். சமூக வாழ்விலும், அரசியல் துறைகளிலும் நடக்கும் பல சம்பவங்களையும் நாம் இந்தப் பேச்சில்லாத மரங்களின் வாழ்விலும் உணரலாம்.

நாம் ஒன்றைக்கவனிப்போம். நன்றாய்க் குலைவைத்துக் காய்க்கும் மரங்களில், மாதம் ஒன்று அல்லது இரண்டு மரங்கள் திடீரென்று பட்டுப்போம். காரணம் தெரியாது. நமது மனதுக்கு தீராத துயரத்தைக் கொடுக்கும். இவ்விதமே தான் மானிட வாழ்வும்.

* * *

கொஞ்ச காலமாக என் நண்பர் சோலையில், மாதம் ஒரு நண்பரை திடீரென்று இழந்துகொண்டே வருகிறேன். இந்த மாதம் 'போகிற போக்கில்'—மாசி, பங்குனி மாதங்களில் டில்லி, ராஜபுடானா போயிருந்தேன்—வழக்கம்போல் வருஷாந்திர யாத்திரை—ஜெயில் கிடைக்காத பலருக்கு மூன்றாவது வகுப்பு யாத்திரையே போதும்; அதுவும் இந்த யுத்த சமயத்தில். போகிற போக்கில் எழுதியனுப்ப முடியவில்லை; யாத்திரையின் அனுபவ ஆனந்தத்தில் பேனாவைப் பிடித்தா மனதைத் தூன் புறுத்துகிறது!

இந்த மாதம் 'போகிற போக்கில்' காலனின் போகிற போக்கிலே பற்றித்தான் எழுதப்போகிறேன். சில மாதங்களுக்குமுன் ஓர் உத்தம நண்பர் காலமாகிவிட்டார். மகா மஹோபாத்யாய குப்புசாமி சாஸ்திரிகள். அவருடைய அபார கல்வி தேர்ச்சியையும், புத்தி விசாலத்தையும், வாக்கின் தெளிவையும் கம்பீரத்தையும் விமர்சிக்க நான் சக்தி வாய்ந்தவன் அல்ல. அவருடன் நான் நன்றாய்ப் பழகியிருக்கிறேன். சென்னை செனட்டில் மூன்று வருஷமும், அண்ணாமலை சர்வ கலாசாலை நிர்வாக சபையில் மூன்றுவருஷமும் கூடயிருந்து ஒத்துழைத்து இருக்கிறேன். பண்டிதர்களுக்கு நிர்வாக சக்தி குறைவு என்று பொதுப்பட சொல்வது வழக்கம். ஆனால் நான் பார்த்தவர்களுக்குள், ஸர் எஸ். ராதாகிருஷ்ணன், பண்டிட் அமரநாத் ஜா, பி. சேஷாத்திரி, குப்புசாமி சாஸ்திரிகள், இந்நால்வரும், ஒப்பற்ற முறையில், பாண்டித்யத்தையும், நிர்வாக சக்தியையும் கையாண்டு வந்திருக்கிறார்கள். இவர்களில் சேஷாத்திரிக்கும், மகாமகோபாத்யாய குப்புசாமி சாஸ்திரிகளுக்கும், சர்வ கலாசாலையில் உப அத்யக்ஷகர் பதவி கிடைக்கவில்லை என்று நான் மிக்க வருந்துகிறேன். தேசத்திற்கு அதிர்ஷ்டக் குறைவுதான்.

சாஸ்திரியாருக்கு ஞாபகார்த்தமாக ஒரு நிதி சேர்க்க ஏற்பாடு ஆகி வருகிறது. அதற்குப் பொது மக்கள் தக்க ஆதரவை அளிக்கவேண்டியது. இவர் பேரால் தனிமையாக, காவிரி தீரத்தில் ஓர் ஸம்ஸ்கிருத சர்வ கலாசாலை ஏற்படுத்த வேண்டியது நமது கடமை.

* * *

திடீரென்று சென்ற மாதம் மற்றொரு மரமும் மத்ய வயதில் சாய்ந்தது. ராவ்பகதூர் கே. வி. சேஷய்யங்கார் காலமானார். 1919-ல் நான் முதல் முதலில், கல்விபெற சென்னைக்கு வந்தபொழுது, ஒரு ஹைஸ்கூல் சிநேகிதர் மூலம், இவரைத் தம்புசெட்டி தெருவில் ஓர் அறையில் கண்டேன்—அவர் கிறிஸ்துவன் காலேஜில் 'டிமான்ஸ்ட்ரேடரா'க இருந்தார். அப்பொழுதே அவர் பின் வாழ்வில் வெளியிட்ட நோக்கங்களையெல்லாம் கையாண்டு வந்தார். மேல் நோக்கிய பார்வை; பறந்த வார்த்தை; அன்பு பாராட்டும் நடத்தை; கொடுப்பதில் களிப்பு; கஷ்டப்படுபவரின் கஷ்டத்தை நிவர்த்திப்பதில் ஆனந்தம்; ஏழைகளுக்குத் தொண்டு புரியும் மனப்பான்மை; அல்ப புத்தி கிடையாது; பிறரைத் தூஷித்து நான் கேட்டதில்லை. சாந்தமான மனோ பாவம். பாகவதத்தில் பெரிய பக்தி. ஹிந்துக்களின் வழிபாடுகளில் நம்பிக்கை. கஷ்டத்தில் மனம் கலங்காத தைரியம். இப்படி நமது நாட்டில் 30 வருஷம் தொண்டு புரிந்த நண்பரை நாம் மறக்கலாமா? சேவை நிதி ஒன்று இவர் பேரால் கூட்டவேண்டாமா?

* * *

இந்தக் குலையிட்டுக் காய்க்கும் தென்னை விழுந்த கையோடு, தோப்

புக்கே வாளைாவி தலே தூக்கி நின்ற பழய மரம் ஒன்றும் திடீரென்று விழுந்து விட்டது. சேலம் சி. விஜய ராகவாச்சாரியார். நமது நாட்டின் புத்துயிருக்கு இவர் ஒரு முக்கிய காரணம். தைரிய லட்சுமி இவரிடம்தான் குடி கொண்டு நின்ருள். அஞ்சாத நெஞ்சம்; அளவில்லாத வீரம்; தெளிவான மேதை; ஒன்று சேர்த்துத் திட்டம் போடுவதில் இவருக்கு நிகர் ஒருவரும் இல்லே. அரசியல் துறையில் பல தொண்டு புரிந்து இருக்கிருர். சின்ன விஷயத்தில்கூட அவர் மூளேயின் வேகம் பரவிச் செல்லும். சொல்லில் வீரமும் தெளிவும், செயலில் திட்டமும் நிர்வாக சக்தியும், புத்தியளிக்கும் முறையுமே குடிகொண்டு நிற்கும். உண்மையில் இவர் சேலம் சிங்கம்தான்.

* * * *

கிழமரம் விழுந்த கையோடு, தோப்பில் குலேயிட்டுக் காய்க்கும் ஒரு இளமாமும் வேர் கரையான்கொண்டு, திடீரென்று விழுந்து விட்டது. என் நண்பர் கு. பா. ராஜகோபாலன் காலமானுர்.

சென்ற 35 வருஷ காலமாக (1909—1944) ஒரு மாருத காட்சியை நான் கண் கூசாமல் கண்டுகொண்டு வருகிறேன். எழுத்தாளர்கள் பாதரக்ஷைகூட இல்லாமல் கப்பிக்கல் ரோட்டில் நடந்து போகிருர்கள். அவர்களேக் கட்டி மேய்த்துத் 'தீனி' போடுகிறேன் என்கிற இடையர்கள் (புத்துயிர் பிரசுராலய சொந்தக்காரர்கள்) மோட்டார் கார்களிலும், வைர தோடுகளின் மினு, மினு இடையில் ஈடுபட்டு மெய்ம்மறந்து போகும் காட்சியைக் காண்கிறேன். உழவன் வீட்டில் நெல் குதிர் ஏது?

சமீபத்தில் எழுத்தாளர்களுக்கு ஒரு மாறுதல்தான்—காலே குத்தும் கப்பிக்கல் போட்ட ரோட் இல்லே, காலேயே வேக வைக்கும் தார்போட்ட ரோடே—மோட்டார் டயரின் ஹிதத்தையும். நீண்ட ஆயுளேயும் கருதி!

இந்தக் கஷ்டத்தில் அகப்பட்டுக் கொண்ட எழுத்தாளர்களில் - மறுமலர்ச்சி எழுத்தாளராய் இருந்தால் புஸ்தக வியாபாரிக்கு என்ன - கு. பா. ராஜகோபாலன் ஒருவர்.

அவரை நான் முதன் முதலில் கண்டது நேற்றைய தினம் போலிருக்கிறது. 'பேபர் போட்ஸ்' 'ஆன் தி சாண்ட்யூன்ஸ்' என்ற ஆங்கிலப் புஸ்தகங்களே நான் வெளியிட்டவுடன் என்னே அவர் பிருந்தாவனத்தில் (மயிலாப்பூரில் ஓர் தெருவின் பேர்—சாக்கடை தண்ணி யமுனு நதியைப்போல் அருகில் ஓடுகிறது!) பார்க்க வந்தார். அப்பொழுது அவருக்கு மிக்க இளமைப் பிராயம். 18 வயது தானிருக்கும்-பி. ஏ. பரீட்சை பாஸ் செய்தவுடன். களங்கமற்ற பால்யம். கலேக் கிளர்ச்சியால் தாண்டிநின்ற மனேபாவம். உணர்ச்சிப் பெருக்கால் கண் கொட்டாமல், நா வெழும்பாமல் என்னேயே பார்த்துக்கொண்டே சிலே போல் நின்ருர். இது நான் என்றைக்கும் மறக்க முடியாத நினைவு.

பிறகு மேலூர் தாலுகா ஆபீசில்—கும்பகோணத்தில் பிறந்தும் என்ன கதி! - சர்க்கார் குமாஸ்தாவாக ஓடிந்த நாற்காலிக்குள் மறைந்தார். தெய்வீகமாக அதை விட்டு விட்டு, பிறகு 15 வருஷ காலம் வறுமையுடன் வாய் பேசாமல் தபசில் நின்று தமிழ்த் தாய்க்கு உழைத்தார். அப்பொழுது சென்னேயி லிருந்தார் — திருவல்லிக்கேணியில்; வ. ரா.வின் கடலோசையிலகப்பட்ட கூவம் நதி சங்கமம் போல், பல தடவைகளில் நான் கு. பா. ராவைச் சந்தித்துப் பேசிப் பழகி யிருக்கிறேன். சாந்த நிலேயை விட்டு ஒருகாலும் மாற மாட்டார்.

நான் 1938ல் 'பாரத மணி'யை நடத்த ஆரம்பித்தவுடன், கு. பா. ரா. 'பாரத மணி'யில் என்னேடு ஆறுமாதம் உழைத்தார். கஷ்ட நிஷ்டூரங்களே வாய் திறவாமல் பொறுத்தார். தனிப் பணிக்கே தான் பிறந்தவர் என்று நாங்கள் இருவரும் கருதினுலும், அவர் எனக்குக் கொஞ்ச காலமாவது உதவிபுரிய வேண்டுமென்று என்னுடன் சேர்ந்தார். அவருக்கு பதவி மோகமே இடையாது.

கு. பா. ரா.வின் இலக்கியச் சுவையை பற்றி பிறகு ஒரு சமயம் எழுதலா மென்று எண்ணுகிறேன். இது தக்க சமயமும் இல்லை. நமது தமிழ் நாட்டில் ஆலை வித்தும்கூட காட்டாமணியாக மாறிவிடும் மாயையை நாம் கண்முன் பலதடவை பார்த்திருக்கிறோம். அதற்குக் காரணங்கள் பல. முக்கிய காரணம், நம்முடைய அளவில்லாத அல்ப புத்தியும், குறைகளையே காணும் கண்களும், தலைவர்களின் சுருங்கி உடைந்து நிற்கும் ஹிருதயமும்தான். பொது ஜனங்களின் ஆதரவு பெறுததற்கு இதுதான் காரணம். உயர்தர கலைகள். இந்த சுழலில் அகப்பட்ட புஷ்பம்தான், கு. பா. ரா. மகாமானி, காய்ந்த பில்லும் அவரை சுருக்கென்று தைக்கும் நுட்பமான மனோபாவம்.

மொழிபெயர்ப்பு - ஜீவனத்திற்காக, வங்காளக் கதைகளைக் கொண்டு பொது ஜனங்களைக் களிக்கச்செய்ய,-இளாக்ஸோ குழந்தைகளுக்குத் தாய்ப்பால் கொஞ்சம் உப்புக்கரிக்குமல்லவா! மொழி பெயர்ப்பு என்ற சட்டியில் கவிதை என்ற வட விருக்ஷத்தைத் தலையைக் கத்தரித்து கு. பா. ரா. அடைத்து வைத்தார். பிழைக்க அதுவே வழியாக இருக்கிறது, நமது தமிழ் நாட்டில் - பிறர் கதையை மொழி பெயர்த்துத் தன் காலத்தை ஓட்டுகிறது!

பெரிய கஷ்டங்களையும் சளையாத நெஞ்சத்துடன் வகித்தார். பிறர் கஷ்டங்களை நினைத்துத் தன் கஷ்டங்களை மறப்பார்: உண்மையான வாழ்வுக்கு அடையாளம்.

39 வயதில் கு. பா. ரா. மறைந்தார். தமிழ் நாட்டிற்கு அளவில்லாத நஷ்டம்; பாக்ய குறைவு. பாரதியார்போல் கஷ்டப் பட்டார் - வெளிக்குத் தெரியாது. அவர் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டியது நமது கடமை. அவர் குடும்பத்திற்கு ஒரு நிதி சேர்த்துக் கொடுக்க வேண்டியது தமிழ் நாட்டின் கடமை.

—மணி

AN APPEAL

V. RAGHAVA IYENGAR MEMORIAL COMMITTEE, MAYAVARAM

Sri V. Raghava Iyengar, M.A., L.T. Headmaster, Municipal High School, Mayavaram, retires in June 1944 after 25 years of distinguished service. Under his lead the school has made steady and all-round progress and is now one of the premier institutions in the province.

It is the desire of his old boys and the citizens of Mayavaram to do him honour on the eve of his retirement in a fitting manner.

The Committee earnestly appeals to the old boys of the school and to the citizens of Mayavaram to contribute generouly to the Memorial Fund. Contributions may be sent to Sri S. Ratnam of S. R. Bros. Mayavaram, the Treasurer of the committee.

முடவன் முழுக்கு

[திவான்பகதூர் - கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

தஞ்சை ஜில்லாவில் உள்ள அழகு வாய்ந்த ஊர்களில் மாயூரம் மிகுந்த பொலிவுடன் விளங்கும் இடம். காவிரி யாறு இனிப்பும் தூய்மையும் நிறைந்த நீருடன் ஓடும் இடம். மாலைப் பொழுதில் கதிரவன் கிரணங்கள் காவிரிநதியின் சின்ன அழகிய அலைகளில் தாவித் தாவிக் குதிக்கும் காட்சியை மலர்ந்த கண்களுடன் படிகளில் உட்கார்ந்து குடத்தைக் கீழே வைத்துவிட்டு நோக்கிக்கொண்டிருந்தாள் ஒரு சிறுமி. அவளுக்குப் பத்து வயதிருக்கும். அழகும் அன்பும் அமைதியும் ஆனந்தமும் நிறைந்த ஹிந்து தேச நாகரிகமே அவள் முகத்தில் விளங்கிற்று. இளமைப் பருவம் நீங்கவில்லை. மங்கைப் பருவம் வரவில்லை. இரண்டு பருவ சந்திக்கேற்ற வர்ணிக்கக்கூடாத வனப்பு. அந்த அழகு நிறைந்த இயற்கைக் காட்சியைப் பார்த்து மகிழ்ந்துகொண்டிருந்த அச் சிறுமிக்கு அவ்விடம் வந்து அவள் பின் நின்று அவளையும் அந்தக் காட்சியையும் மாறிமாறிப் பார்த்துக் களித்த வாலிபன் வரவு தெரியவில்லை. அன்பு ததும்பும் குரலில் "ஜானகி" என்ற சொல் காதில் விழவே அவள் திரும்பிப் பார்த்தாள்.

"நீதானா? யாரோ என்றல்லவா திடுக்கிட்டது. நீ ஊருக்கு வந்ததே தெரியவில்லையே" என்றாள்.

"இன்று காலைதான் வந்தேன். நான் வருவது போவது உனக்குத் தெரிய எனக்கு அதிர்ஷ்டமும் புண்ணியமும் வேண்டாமா" என்றான் அவ்வாலிபன்.

அவன் பெயர் ராமநாதன். அவள் வீட்டுக்கு எதிர்வீட்டில் அவன் இருந்தவன். அவர்கள் இன்மை வயதுமுதல் நேசமாக விளையாடிக்கொண்டிருந்தவர்கள். அவள் முகத்தில் முறுவல் பூத்த எழிலைத் தன் சொற்களால் எழும்படிச் செய்வதில் அவனுக்கு எப்பொழுதும் மகிழ்ச்சி. இப்பொழுது பட்டணம் காலேஜில் படித்துக் கொண்டிருந்ததால் அவன் ஊருக்கு வருவது குறைவு.

"நீ நேற்றைய தினம் கடை மகத்திற்கு வந்திருக்கக்கூடாதா? பெரிய பெரிய கூட்டம். வெகு வேடிக்கை. உனக்கு அதெல்லாம் மிகவும் பிடிக்குமே" என்றாள் ஜானகி.

"ஆமாம்; அந்த எண்ணத்துடன் புறப்பட்டேன். வழியில் ரயில் வெள்ளப்பெருக்கால் தடைபட்டதால் முடவன் முழுக்குக்காகிலும் வந்தேன். நான் தான் நொண்டி என்று உனக்குத் தெரியுமே" என்றான் ராமநாதன். அதைக் கேட்ட உடன் அவள் புன்னகையால் மலர்ந்த முகத்துடன் அவனை நோக்கினாள். சில வருஷங்களுக்கு முன் அவளுக்குச் சம்பகப்பூ பறித்துக் கொடுக்க மரத்திலேறிக் கால்தவறிக் கீழே விழுந்து கால் முறிவு ஏற்பட்ட பிறகு குணமானதை அவன் குறிப்பாகச் சொன்ன சொல் நினைவு ஊட்டியது. எப்படி எப்படியோ கடவுள் இரண்டு உயிர்களைக் கண்ணால் காணாத சிக்கலான விலங்குகளால் பூட்டி விடுகிறார்.

"முடவன் முழுக்கு என்றால் இலவசமா நகைக்கக்கூடிய விஷயமா? ஏகாந்த சுகம் அல்லவா? கூட்டங்களெல்லாம் மறைந்த பிறகு காவிரியும் முடவனும் மட்டும் தனித்திருந்தார்கள் அல்லவா" என்றாள்.

"நீ சொல்லும் ஒவ்வொரு சொல்லிலும் புதுமை மணக்கின்றது. அதிருக்கட்டும். நான் எங்கே இருந்தாலும் மேன்மையாக இருந்தாலும் தாழ்மையாக இருந்தாலும் என் நினைவு உனக்கு இருக்கட்டும்" என்று அன்பும் பிரிவின் துன்பமும் தொண்டையை அடைத்துக் கொண்ட குரலில் அவன் சொன்னான். காவிரிநதியின் சின்ன அலையும் அவன்

காலில் தொட்டு கெஞ்சியது போல் இருந்தது. "அப்படியே நான் மறப்பேனு" என்று சொல்லித் தன் அன்பை வெளிக்காட்டாமல் வெட்கி மறைத்து அவள் குடத்தில் தண்ணீரை எடுத்துக் கொண்டு வீட்டுக்குப் போய்விட்டாள்.

இப்படியே நாலு வருஷங்கள் ஓடி மறைந்தன. ஜானகி யுவதியானுள். அவளுடைய பெற்ருேர்கள் அவளுடைய மண விஷயமான முயற்சியில் ஈடுபட்டிருந்தார்கள். ராமநாதன் காசி சர்வ கலாசாலேயில் படித்துக்கொண்டிருந்தான். தேச் சேவையில் ஈடுபட்டுத் தாய்நாட்டில் அறியாமை வறுமை பிணி முதலிய கேடுகள் இல்லாமல் சுதந்திர வாழ்க்கை இருக்கவேண்டும் என்ற பெருவிருப்பங் கொண்டவன். சில காலம் கள் குடித்தல் மறியல் செய்த தற்காகச் சிறையில் இருந்தான். பிறகு வக்கீல் பரீக்ஷையில் தேறி சென்னைப் பட்டணத்தில் வக்கீலாக இருந்துவந்தான். அவன் குடும்பம் நடுநிலேமையான பணக்காரக் குடும்பம். அளவற்ற செல்வம் உள்ளதல்ல. அவனுடைய தேசிய எண்ணங்களே ஜானகி முற்றும் உணர்ந்து மெச்சினுள். தானும் அவன்போல் ஹிந்தி பாஷையில் தேர்ச்சி பெற்ருள் : ஏழைகளுக்கு இரங்கிய மனதுள்ளவள். தேச சேவை செய்ய தனக்குப் பாக்கியங் கிடைக்கவேணும் என்ற பெரு விருப்பங் கொண்டவள். நேராக அவனுடன் பேச வெட்கத்தாலும் தேச வழக்கங்களாலும் தடைப்பட்டாலும் கண் நோக்காலேயே அவனுடைய தேச சேவை ஊக்கத்தை வளர்த்தாள்.

ஆனல் அவள் பெற்ருேர்கள் பணம் பதவி பட்டம் முதலிய பெருமைகளில் ஆசை வைத்தவர்கள்; பெரும் பணக்காரர்கள்; ஜானகி அவர்கள் மூத்த குமாரி. அவள் மணத்தை அதுவரையில் ஊரில் காணுத மகிமையாகச் செய்ய வேணும் என்று அவர்கள் சங்கல்பம். அவர்கள் ராமனுதனே மணமகனுக நினைப்பார்களா? நினைக்கவே இல்லே. அடுத்தத் தெருவில் பெரிய மிராசுதார் சுந்தரமய்யர் குமாரன் மகாதேவனை மணமகனுக விரும்பினுர்கள். மகாதேவன் ஐ. ஸி. எஸ். பரிக்ஷையில் தேறிவிட்டான். கலெக்டர் உத்தியோகம். எதிர் ஜாமீன் 20,000 ரூபாய் என்று முடிவு செய்தாய்விட்டது. ஜானகியின் தந்தை ரகுநாதய்யர் அவள் மண விஷயமாக முடிவு செய்துவிட்டாலும் ஜானகியின் சம்மதத்தை ஒப்புக்காகக் கேட்டார்.

"எனக்கு என்னமோ சம்மதம் இல்லே. பணமும் பதவியும் தானு பெரியது? சிலகாலம் கழித்துக் கல்யாணத்தைப்பற்றி நிச்சயம் செய்யலாமே" என்ருள்.

அதற்குமேல் வாய்விட்டு எப்படிச் சொல்வது? ராமநாதன் அப்பொழுது தன் தொழிலில் மேன்மையாகத்தான் இருந்தான். அவன் விஷயமான பேச்சே வீட்டில் இல்லாத பொழுது அவள் அவனைப்பற்றி எப்படிச் சொல்ல முடியும்? அதுவுந் தவிர அச்சமயம் அவன் நாட்டின் தொண்டில் ஈடுபட்டுச் சிறையில் இருந்தான். வேறு ஒரு வழியும் இல்லாமல் கடவுளிடத்தில் தன் நிலேயை ஒப்படைத்துத் தியானத்தில் ஆழ்ந்திருந்தாள்.

கல்யாண தினம் வந்தது, அதற்கு முன்னுள் ஒரு நகை விஷயமாக சம்பந்திகளுக்குள் மனத்தாங்கல் ஏற்பட்டது. வைர அட்டிகை போட்டால்தான் கல்யாணம் நடக்கும் என்று சுந்தரமய்யர் கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். பேச்சு மேல் பேச்சு வளர்ந்து மனஸ்தாபம் முற்றிப்போய்க் கல்யாணம் நின்று போய்விட்டது.

அன்றைய தினம்தான் ராமநாதன் சிறையிலிருந்து மீண்டு வந்தான். மணப் பத்திரிகையை பார்த்தான். மனமுடைந்து போயிற்று. இருப்புக் கொள்ளாமல் ரயிலேறி ஊர் வந்து சேர்ந்தான். தன் வாழ்வு உடைந்த பிறகு உலகம் எப்படி போனல் என்ன என்ற வெறுப்பு அவன் மனத்தில் குடிகொண்டது.

இப்படிக் கல்யாண தினத்திற்கு மறு நாள் ஊர் வந்து சேர்ந்தவனேக் காவிரிக் கரையில் ரகுநாதய்யர் கண்டார். உடனே

சிகித்ஸா ஸ்வபோதினி

அஜீர்ணம்

[திருஷ்ட கர்மா]

அத்தியாயம் 1

வைத்யர் வேங்கடரமண சர்மா தன் வைத்தியசாலையில் வழக்கப் பிரகாரம் அமர்ந்து ஒரு புத்தகத்தைப் பிரித்து வாசித்துக் கொண்டிருந்தார். தூரப் பார்வைக்கு இப்புத்தகம் சுந்தர காண்டத்தைப் போலிருந்தது. அவர் படிப்பதை தூரத்திலிருந்து கேட்டவர்களும் அவ்விதமே நம்பினார்கள்.

" பாராயணம் நடக்கிறாப் போலிருக்கிறது" என்று சொல்லிக்கொண்டே வீரராகவய்யர் நுழைந்தார்.

" அய்யர்வாளா வாருங்கள். பாராயணம்தான். சுந்தர காண்டத்தைப் படித்தால் மனோபீஷ்டங்கள் நிறைவேறும் என்பார்கள்."

"ஆமாம், எந்த ஸர்க்கம், எந்த ஸ்லோகம் படித்தீர்? நமக்குச் சகுனம் ஆகிறதாவென்று பார்க்கலாம்."

" உங்களுக்கு எப்பொழுதும் சகுனம் ஆகும். 'நெருப்பைப் பெருக்கும்' என்ற இடத்தில் நிறுத்தினேன்."

" லங்காதஹனமா! பேஷ், நம்மைப் பிடித்த நோய்களெல்லாம் எரிந்து சாம்பலாகிவிடும். நல்ல கட்டம் வைத்தியரே."

" அது என்னமோ வாஸ்தவம்தான். இந்த அழகிய புத்தகத்தில் சொல்லியிருக்கிற விஷயம் அவ்வளவு உத்ஸாகத்தைக்

அவர் மனதில் அவன் அழகும் தீரமும் பெருந் தன்மையும் பட்டன. அவனும் ஜானகியும் குழந்தைப் பருவம் முதல் பக்ஷமாக இருந்த விஷயமும் நினைவு வந்தது. வீட்டுக்குப் புறப்படுவதற்குமுன் அவனிடம் பேசினார். அவனுடைய உயர்ந்த குணங்களில் ஈடுபட்டார். வீடு சென்ற உடன் தான் அவனுடன் பேசின விஷயத்தைச் சொன்ன பொழுது ஜானகியின் முகமலர்ச்சியைக் கண்டார். உடனே தன் மனைவியிடம் பேசி பிறகு ராமநாதன் தந்தை தசரதராமய்யரிடம் தன் எண்ணத்தைத் தெரிவித்து இருவரும் ராமநாதனுக்கு ஜானகியை விவாக செய்ய ஒத்துக்கொண்டார்கள். அன்றைய தினமே விவாக முகூர்த்தமாக இருந்ததால் விவாகம் நடந்தது. சில நாட்களுக்குப் பின் சாயங்காலம் ஜானகி காவிரியாற்றுக்குச் சென்று அங்கே தன் சந்தோஷமான சிங்காரமான எண்ணங்களைத் தன் அருமைத் தோழியான காவிரியிடத்தில் சொல்வதுபோல் மனங் கனிந்து நோக்கிக் கொண்டிருந்தாள்.

அவ்விடத்தில் ஈசன் செயலாக அவனோ அவளோ எதிர்பாராதபடி ராமநாதன் அங்கே வந்து சேர்ந்தான். 4 வருஷம் முன் நடந்த விஷயத்தை அவன் மனம் சித்தரித்தது. காவிரி நதியையும் ஜானகியையும் மாறிமாறி நோக்கிக் களிகூர்ந்தான். அவள் திரும்பியபொழுது அவனைப் பார்த்த உடன் வெட்கமும் அன்பும் குறும்பும் அவள் மனதில் போராடின.

" இப்படி முடவன் முழுக்குக்காகிலும் வர நேர்ந்ததே. நேற்றைய தினம் நம்முடைய வாழ்க்கைப் படுமோசமாகப் போக இருந்தது. காவிரிதேவிதான் காப்பாற்றினாள் " என்றாள்.

" முடவன் முழுக்கு என்றால் இலவசமா? நகைக்கக்கூடிய விஷயமா? ஏகாந்த சுகம் அல்லவா? கூட்டங்களெல்லாம் மறைந்த பிறகு காவிரித் தோழியும் முடவனும் மட்டும் தனித்திருந்தார்கள் அல்லவா" என்று ராமநாதன் கூறினான்.

இருவர் கண்களிலிருந்தும் துளித்த இன்பக் கண்ணீர் காவிரி நதியின் இனிப்பும் தூய்மையும் வாய்ந்த தண்ணீருடன் கலந்தது.

கொடுக்கக்கூடியதாக விருக்கிறது. 'மாத்திரை என்பது அக்கினியைத் தூண்டும்' என்று எவ்வளவு சுலபத்தில் சொல்லி விட்டார் ஆசார்ய வாக்படர்!''

"இது சுந்தரகாண்டத்தி லில்லையே" என்றார் திகைப்புடன் வீரராகவய்யர்.

சர்மா—இருக்கிறதாக நானும் சொல்ல வில்லையே; என் கையிலுள்ள அஷ்டாங்க ஹிருதயத்தில் அல்லவோ இருக்கிறது. உங்களுக்குச் சுந்தரகாண்டம் போல் தோன்றியது. அப்பெயர் இதற்கும் பொருந்தும் என்று எண்ணியே பதில் சொன்னேன். எங்களுக் கெல்லாம் வேறு என்ன வேலை யிருக்கிறதென்று சொல்லுங்கள். எப்பொழுதும் பாராயணம்போல், அஷ்டாங்க ஹ்ருதயம், சரகம், சுஸ்ருதம் முதலிய கிருந்தங்களைத் திருப்பித் திருப்பிப் படிப்பதும், வாக்யார்த்தங்களை மனதில் வாங்கிக்கொண்டு ஆலோசனை செய்து நுட்பங்களை யறிந்து ஆனந்தப்படுவதையும் தவிர வேறு ராம ஜபமும் உண்டோ? சுந்தர காண்டத்தைப் போலவே இவைகளும் தர்மம், அர்த்தம், சுகம் முதலியவைகளை அடைய உதவுகின்றன. ஏனென்றால், இவைகளுக்குச் சாதனமாக விளங்கும் தீர்க்கமான ஆயுளை விரும்புகிறவன், எப்போதும் ஆயுர்வேதம் என்கிற 'ஆயுளைப் பற்றிய அறிவு நூல்' செப்பும் உபதேசங்களைப் பரம பக்தி சிரத்தையுடன் கடைபிடிக்க வேண்டும் என்றே எங்களுடைய பரமாசார்யர் சொல்லுகிறார். இவ்விதிகளை நன்கு ஆராய்ந்து எமக்கும் உங்களுக்கும் பயன்படுமாறு உழைக்கும் விரதம் பூண்டிருக்கும் வைத்தியர்களுக்கு வேறொரு சுந்தர காண்டமும் தேவையோ?

வீர: ஆமாம், எனக்கு மப்படித் தான் படுகிறது. இவ்வளவு பெரிய படிப்பும், பரம்பரை யனுபவமும் பெற்று இருந்தும் நீங்கள் அதிகம் சம்பாதிக்க வில்லையே, என்ற குறை எனக்கு. ஆகவேதான் வைத்திய சாலையில் சிறிது பகட்டுடன் இருக்கக்கூடாதா! இப்படிப் பாராயணம்போல் படித்துக்கொண்டிருந்தால், வருகிற வியாதியஸ்தன் திரும்பிப் போய்விட மாட்டானா என்ற கவலையில் கேட்டேன்.

சர்மா: நீங்கள் கவலைப்படுவது சகஜம். ஆனால் உண்மை அனுபவம் வேறு விதமாயிருக்கிறது. வருகிறவர்களை லக்ஷியம் செய்யாமல் இருந்தால் நீர் சொல்லுவது வாஸ்தவம். பெரியோர்களிடத்தில் படித்து, அறிவையும் மிக்கப் பெருக்கிக் கொண்டு, பன்முறையும் அப்பியாசம் செய்து த்ருஷ்ட கர்மாவாக இருக்கும் வைத்தியன் சுத்தமாகவிருக்க வேண்டுமே ஒழிய பகட்டாக இருக்க வேண்டுமென்பதில்லை. வந்தவர்களை அன்புடன் வரவேற்று, அவர்கள் குறைகளை விசாரித்துத் தக்கப் பரிகாரங்களை வகுக்கும் வைத்தியன் எப்போதும் ஜனங்களின் பகுமானத்தை இழக்கமாட்டான். கர்ம யோகத்திற்குச் சாதனமாக ஏற்பட்டது தொழில். பணத்தைச் சம்பாதிப்பது என்பதே அதன் குறியில்லை. ஆகவே அவரவர்கள் கர்மத்தினால் இந்த ஜன்மத்தில் வியாதியுறுகிறார்கள் என்ற அனுபவத்துடன் அவர்கள் கர்மம் தலையும் பொழுது பகவான் அவர்கள் வியாதியை நீக்க வைத்தியர்களை நிமித்த காரணமாகக் கொள்ளுகிறார் என்று அறிந்து தேடி வந்த ரோகிகளுக்கே வைத்தியன் சிகிச்சை செய்ய உடன்படவேண்டும். அவ்வாறின்றி வியாதியஸ்தர்களைத் தூண்டித் தன்னிடம் சிகிச்சைக்கு வரும் படிச் செய்யும் பிரயத்தினங்களெல்லாம் பகவானின் ஆராதனையில் பிழைப்படுவதாகும்.

வீ: ரொம்ப நியாயமாகத்தான் சொல்லுகிறீர். உங்களைப்போல் வெகு சிலரே இருப்பார்கள். இருந்தாலென்ன உங்கள் தலையில் எழுதினவன் குயவனில்லை. உங்களுக்குப் பகவான் ஒரு குறையும் வைக்கமாட்டார்.

ச: சந்தோஷம். தங்கள் வந்த விஷயம் என்னவென்று கேட்காமலேயே ஏதேதோ பேச்சு வளர்ந்துவிட்டது.

வீ: அதனாலென்ன! இதெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள்தானே. நேற்றிரவு டவுனிலிருந்து வரும்போது மணி பத்தரை, பதி

ஞென்றுகூட இருக்கும். பஸ்ஸுக்குக் காத்துக்காத்து ஒவ்வொருநாள் இப்படியாகிவிடுகிறது. எப்போதும் இரவு 8 மணிக்குள்ளேயே சாப்பிட்டுவிடுவது வழக்கம். நேற்றைய தினம் சாயந்திரம் 7½ மணி வரையிலும் டவுனிலேயே இருக்கவேண்டிய ஜோலி யிருந்துவிட்டது. ஆகவே முன்பசி யாறுவதற்காகச் சிறிது பொங்கலும் காப்பியும் ஓட்டலில் சாப்பிட்டேன். நல்ல ஓட்டல் பண்டமும் சுசிருசியாக விருந்தது. வீட்டிற்கு வந்ததும் பசிக்கிறுப் போலிருந்தது. அகாலமாச்சே என்று கொஞ்சம் வென்னீர் சாப்பிட்டுவிட்டுப் படுத்துவிடலாம் என்று எண்ணினேன். ஆனுல் வீட்டிலிருக்கிறவா விடுகிருளா. 'சாயந்திரம் கொஞ்சம் சாப்பிட்ட பொங்கல் எத்தனை நாழியிருக்கும். நன்னுயிருக்கு, ராத்திரி காலம் பட்டினியாப் படுக்கக் கூடாது' என்ருள். நான் ரஸம், குழம்பெல்லாம் நம்மால் சாப்பிட முடியாது என்று மறுதளித்தேன். ஆவியில் வெந்தது ஒன்றும் செய்யாது என்று சொல்லி ஒரு தட்டு சேவையும் அதற்குமேல் ஒரு டம்பளர் பயத்தங் கஞ்சியும் சாப்பிட்டு ஒரு டம்ளர் சுக்குத்தட்டிக் காய்ச்சிய வென்னீரும் சாப்பிட்ட பிறகுதான் விட்டாள். உடனே படுக்கை விரித்துப் படுத்தேன். 5 நிமிஷங்களுக்குள் மானேஜர் கூப்பிட்டதாக அவசரமாக ஆள் வந்தான். சைக்கிள் எடுத்துக்கொண்டு வேகமாகப் போனதுதான் மிச்சம். வேலையொன்றும் பிரமாதமில்லை. இந்த மானேஜரே அப்படித்தான். அரைமணியில் வீட்டுக்குத் திரும்பிவிட்டேன். வந்து படுத்ததுதான் தெரியும். அயர்ந்து தூங்கினேன். சுமார் மணி 3 இருக்கும். சிறுநீர் கழிக்க எழுந்திருந்தேன். சுத்த ஜலம்போல் கலகலவென்று நீர் இறங்கியது. வந்து படுத்தேன். சிலுசிலுவென்று இருந்தது. தூக்கம் வரவில்லை. அப்புறம் 2, 3 தடவை சிறுநீர் கழித்தேன். காலையெழுந்திருந்தால் உடம்பு கனமாயிருக்கு. தலை சுற்றும்போலிருக்கு. பலஹீனமாக யிருக்கிறது. மலசுத்தி சரியாகவில்லை. ரொம்பலாக உடம்பெல்லாம் ஓர் வலி இருக்கிறது. வாய் சரியாக இல்லை. காப்பிக்கூடப் பிடிக்கவில்லை. கொஞ்சம் கையைக்காட்டிக் கேட்டுப் போகலாமென்று வந்தேன்.

ச : சரி, கையைக் காட்டுங்கள் பார்க்கலாம்.

வைத்தியர் வீரராகவய்யரின் வலது கரத்தைப் பிடித்து நெட்டி வாங்கி, நாடி பரீட்சை செய்தார். அய்யரைப் பலகை மீது சுகமாக வீற்றிருக்கச் செய்து தனது இடது கரத்தால் அவருடைய வலது கரத்து விரல்களைப் பிடித்துக் கொண்டு தனது வலது கரத்து விரல்களால் நாடியைப் பரீக்ஷை பண்ணினுர். அவரது பெருவிரலின் கீழ் மேலாகவே ஓடும் சுத்த ரத்ததமனியாகிற ரத்தக் குழாயின்மீது ஆள்காட்டி விரலை லேசாக வைத்து அந்த ஜீவநாடியின் பலம் எவ்வாறு இருக்கிறது என்று அறிய முயன்றுர். அதன் வேகம், பருமன், நிதானம், சீதோஷ்ண உணர்ச்சி முதலியவைகளைக் கண்டறிய நிதானமாக அழுத்தியும், தளர்த்தியும் பலமுறைகள் பரீக்ஷித்தார். பிறகு தன் ஆள்காட்டி விரல், நடுவிரல் மோதிர விரல் இவைகளை வரிசையாக ஜீவநாடிக்குக் கீழே முழங்கை நோக்கி நாடியின்மீது பதிய வைத்து முன் சொல்லிய பிரகாரமே முறையே வாதம், பித்தம், கபம் என்கிற முத்தோஷங்களின் நிலையையும் கவனித்தறிந்தார். இன்னுடி பரீக்ஷை நடக்கையிலேயே தன் கூரிய கண்களினுல் அய்யரின் முகப் பொலிவு, வேதனைகள் முதலியவைகளை அளந்து அறிந்தார். நாக்கை நீட்டச் சொல்லி நாக்கில் படிந்திருக்கும் தோஷ விசேஷங்களையும் நிற மாறுபாடுகளையும் கவனித்தார்.

நாடி வேகமாகவும் சிறிது உஷ்ணமாக இருப்பதாகவும் நாக்கு சிறிது மஞ்சள் படிந்த வெண்மைப் பூச்சடைந்திருப்பதையும் கண்டுகொண்டார்.

வீ : சுரம் இருக்கிறதோ ? இன்றைக்கு வேண்டுமானுல் சோடா சாப்பிட்டுவிட்டு லங்கணம்போட்டுவிடட்டா? ஆபீஸுக்குப் போகவேண்டாம் என்று தீர்மானம் செய்துவிட்டேன். பார்த்தும்

கொண்டு போனால் போகிறது. இப்பொழுது கூட லீவு எடுக்காவிட்டால் எப்பொழுதுதான் லீவ் போடுகிறது. நான்கு வருஷங்களில் ஒருநாள்கூட லீவ் எடுக்கவில்லை. என்ன சொல்லுகிறீர் வைத்தியரே ?

ச : லீவ் எடுக்கிறதென்றால் எடுத்துக் கொள்ளுங்களேன். அஜீர்ணத்தினால் சிறிது சுரம் வந்திருக்கிறது. வாயுவும் கொள்ளவே குளிரும் தலைவலியும்கூட லேசாக இருக்கிறது. அன்னத் துவேஷம் முதலியவையெல்லாம் பித்த லக்ஷணங்கள். லங்கணம் போடுங்கள் சீக்கிரத்தில் சரியாகிப் போய்விடும். அடிக்கடி சுக்குத் தட்டிப்போட்ட வென்னீர் மட்டும் சாப்பிடலாம். சாயந்திரத்தில் உடம்பு கனம் குறையாமலும், அரோசகம் நீங்காமலும், சுரம் வந்தமாதிரியிருந்தால் அரைப் பலம் முத்தின இஞ்சியைத் தட்டிச் சார் பிழிந்து சிறிது நேரம் பாத்திரத்தில் வைத்திருந்தால் அடியில் வெண்மையான சுன்னம் படிந்துவிடும். தெளிவாக அந்த ரஸத்தில் அரைப்பாலாடை எடுத்து 10 சொட்டு தேனையும் கலந்து சாப்பிட்டால் அஜீர்ணம் அடிபட்டுவிடும். பித்தமும் வாதமும் சமனமாகும். பசி எடுக்கும். மேல் வயிற்றில் உள்ள உப்புசமும், கனமும் குறையும். பிறகு இந்த பொட்டலத்தில் தந்திருக்கும் சூரணத்தைச் சிறிது சாதத்தில் கலந்து நெய்விட்டுப் பிசரி இளஞ்சூடாகச் சாப்பிடவும். ராத்திரி படுக்கும் போது கொஞ்சம் வென்னீர் சுக்குத் தட்டிப்போட்டு ஆற்றிச் சாப்பிடவும்.

வீரராகவய்யர் வைத்தியர் கொடுத்த அஷ்ட சூரணத்தை எடுத்துக்கொண்டு வைத்தியருக்கு வந்தனம் அளித்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினார்.

அவர் போனதும் இவைகளையெல்லாம் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த டாக்டர் சுந்தரம் சர்மாவை ஊக்கமுடன் பல கேள்விகள் கேட்கத் தொடங்கினார்.

சுந்தரம் ஓர் ஆங்கில வைத்தியர். ஸம்ஸ்கிருதம் படித்தவர். தானாகவே உத்ஸாகத்தின் மேலீட்டால் அஷ்டாங்க ஹ்ருதயத்தைப் படிக்க முயன்று பார்த்தவர். தெய்வீகக் கட்டுரையொழிய வித்தைப் பயன்படாதென்று எண்ணுகிறவர். சர்மாவிடம் அதிக விஸ்வாசமும் நம்பிக்கையும் உடையவராகையால் இவர் வைத்தியசாலையிலேயே சில காலம் தங்கிப் பயிற்சிபெற ஆவலுற்றவர். சர்மா மிக்க உத்ஸாகமும், தெளிவான ஞானமும் உள்ள அனுபவம் மிகுந்த எல். ஐ. எம். என்ற காரணத்தினால் சுந்தரம் இவரிடம் அனுபவத்தைக் கற்றுக்கொள்ள ஆவலுற்றார். ஏனென்றால் எல். ஐ. எம்.கள் 5 வருட காலம் இந்திய மருத்துவக் கல்லூரியில் படித்து அனுபவம் பெறுகையில் ஆங்கில வைத்தியத்தைக் கட்டாய பாடமாகப் படித்தவர்கள். ஆயுர்வேதத்தையும் விசேஷ பாடமாகப் பயிலுகையில் பலவித ஸம்ஸ்கிருத பரிபாஷா சொற்களையும் நவீன ஆங்கில வைத்தியர்களுக்குப் புரியும் வகையில் எடுத்துச் சொல்லத் திறமையை அடைகிறார்கள். அநேக விஷயங்கள் ஸம்ஸ்கிருதத்திலேயே மனத்திற்குப் பிடிபடாத வகையில் அமைந்து இருக்கும். ஆங்கில வைத்தியத்தைப் படித்து நவீன விஞ்ஞான ஆராய்ச்சிகளையும் இரசித்து மறுமுறை அதே ஆயுர்வேத விஷயங்களை அறிய முயன்றால் பளிச்சென்று ஞானோதயம் ஏற்பட பலச் சந்தர்பங்கள் ஏற்படுகின்றன. அதனால்தான் இக்கல்வி முறை இந்திய மருத்துவக் கல்லூரியில் கையாளப்படுகிறது. மேலும் ஆயுர்வேதத்தின் சிற்சில பாகங்கள் சிதிலமாகி, கிரந்தங்கள் தற்போது கிடைக்கப் பெறாமலுமிருக்கின்றன. ஆகவே இவ்வித விஷயங்கள் நவீன முறைகளின் ஆராய்ச்சியினால் கிடைக்கப் பெறுமாயின் அவைகளையும் ஆயுர்வேத தத்துவங்களுக்கு முரண்படாத வகையில் ஸ்வீகரணம் செய்ய அதிகாரம் பெற்றவர்கள் உபய வைத்தியப் பிரவீணர்களே. ஆகவே நன்கு தேர்ச்சி பெற்ற எல். ஐ. எம். ஒருவர்தான் இதற்கென்று அமைந்தவர் என்று அறிவாளியாகிய சுந்தரம் தேர்ந்ததில் ஆச்சரியமில்லை.

டாக்டர் சுந்தரம் : சர்மா, இந்த நோயாளிக்கு அஜீர்ணம் வரக் காரணம்

என்ன? அதிகமாகச் சாப்பிடவில்லை. பத்தியமான பொருள்களைத்தான் சாப்பிட்டேனென்றார். அஜீரணத்தின்மீது சுரமும் வந்திருக்கிறது. இதெல்லாம் எப்படி ஏற்படுகிறது?

ச: சுந்தரம், நீ என்ன அப்படி கேட்கிறாய்? அஜீர்ணம் வர அதிக ஆகாரம் சாப்பிடவேண்டிய அவசியமில்லை. அஷ்டாங்க ஹ்ருதய "மாத்ர ஸிதியம்" அத்தியாயத்தில் படிக்கவில்லையா? வேண்டாததாயும், மலபந்தம் செய்யக்கூடியதும், தீந்து போனவைகளும் கஷ்டப்பட்டுச் சீரணிக்கக்கூடிய குருகுணமுள்ள ஆகாரங்களும், எண்ணெய்ப்பசையில்லாத வறண்டுபோன ரூக்ஷமானவைகளும், மிகவும் குளிர்ந்தனவும், மிக்க உலர்ந்தனவும் திரவம் மிகுந்தவையும், சீரணமாகா. மேலும் கோபம், தாபம், சோகம் இவைகளுடன்

சாப்பிட்டாலும், அல்லது பசி மிஞ்சிச் சாப்பிட்டாலும் இவ்விதமே அஜீரணம் உண்டாகும். மேலும் அகாலத்திலும், குறைவாகவாவது, அதிகமாகவாவது சாப்பிடும் ஆகாரம் விஷமாசனம்" எனப்படும். சாப்பிட்ட ஆகாரம் சீரணிக்கு முன் மற்றும் ஒருமுறை சாப்பிடுவது "அத்தியசனம்" எனப்படும். பத்தியம், அபத்தியம் என்ற இருவகை யாகாரங்களையும் கலந்து உண்பது "சமசனம்" எனப்படும். இவைகளும் அஜீர்ணத்திற்குக் காரணம். மேலும் சாப்பிட்டவுடன் வேகமாக ஓடுவதும் பேசுவதும்கூட அஜீர்ணத்தைக் கொடுக்கும்.

டா. சு : ஆம், ஞாபகம் வருகிறது. இந்த வீரராகவய்யர் அஜீர்ணத்திற்கு வேண்டிப் பல காரியங்களைச் செய்திருக்கிறார். அவர் சாப்பிட்டது அத்யசனம் ஆகும். மேலும் திரவம் மிக்கச் சாப்பிட்டார். போராதக் குறைக்குச் சைக்கிளிலும் சாப்பிட்ட உடன் வேகமாகப் போனார். முன்னிரவில் பஸ்ஸூக்கு வேறு காத்துக் காத்துத் தாபம் வேறு உற்றிருக்கிறார். இவ்வளவு நன்றாக புலப்படும்படி அவரே சொல்லி வருகையில் உங்களுக்கு அனுபவம் இருந்த காரணமாக உடனே அறிந்து கொண்டுவிட்டீர்.

ச : நன்றாக எடுத்து உரைக்கிறாய் சுந்தரம். இன்னும் கொஞ்சநாள் ஊன்றிக் கவனித்து வந்தால் நீயே ஆசார்யனாகி விடுவாய். இப்போது இந்த அஜீர்ணத்தினால் ஏற்பட்ட "ஆமம்" உடம்பு கனத்திற்கும், சுரத்திற்கும் காரணம். இந்த ஆமம் விலகவேதான் "பாசனி"யும் "தீபனி"யுமாகிற இஞ்சி சுரஸத்தைச் சாப்பிடச் சொன்னேன். தேனும் கபத்தை யறுக்கக்கூடிய சுபாவமுடையதால் ஆமாசயமாகிற மேல் வயிற்றிலே உள்ள தோஷத்தை விலக்கச் சேர்க்கச் சொன்னேன். இங்குவாஷ்டகத்தையும் அக்னியை விருத்தி பண்ணவே கொடுத்தேன்.

டா. சு : [illegible] தனி மருந்து தெ[illegible]க்கவில்லையே ?

ச : இல்லைதான். இங்கு அஜீரணம் தான் பிரதானம். இது நீங்கினால், உபத்திரவமாக வந்த தலைவலி, சுரம், அரோசகம் முதலியவை தானாக நீங்குகின்றன.

டா. சு : ஆமாம், இந்த அக்னியைப் பெருக்குகிறது என்றீரே அது என்ன ?

ச : அதுவா? அதுதான் சூக்ஷ்மம். அஜீர்ணம் என்பதை கிட்ட வராமலே இருக்க ஆகாரங்களையோ, ஔஷதங்களையோ உபயோகிப்பதில்கூட சூக்ஷ்மம் இருக்கிறது. குருவான ஆகாரங்களை அரைவாசி திருப்தி ஏற்படும்போதே அருந்தாமல் நிறுத்திவிட வேண்டும். சுலபத்தில் சீரணமாகும் லகுவான வஸ்துக்களை அதிகத் திருப்தி ஏற்படுமுன் நிறுத்திக்கொள்ள வேண்டும். அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷமாகும். மாத்திரை என்பது அளவைக் குறிக்கும். அதனால்தான் "மாத்திரையே அக்னியைத் தூண்டும்" என்று சூக்ஷ்மத்தில் உபதேசம் செய்தார் ஆசார்யர் வாக்படர்.

டா. சு : ஆமம் என்றீர்களே ! அந்த வியவகாரமும் குருமுகமாகத்தான் கேட்க வேண்டும் போலிருக்கிறது.

ச : மற்றொரு நாள் விஸ்தாரமாக ஆலோசிப்போம். இதையறிந்து வைத்தியம் செய்துவிட்டால் பாதி வைத்திய சாஸ்திரம் கரைகண்ட மாதிரியே. ஆகவே கவனமாக ஆலோசிக்க வேண்டிய விஷயம்.

டா. சு: அப்படியே. ரொம்ப வந்தனம்.

குறிப்பு

ஹிங்குவஷ்ட சூரணம்

பெருங்காயம் - திரிகடு (சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி இவை சமபாகம் கொண்டது.) ஓமம், சீரகம், கருஞ்சீரகம், இந்துப்பு. இவைகளைச் சமயெடையாக இடித்துச் சூரணம் செய்து அன்னத்தில் போட்டு பிசரி சாப்பிடலாம். (பெருங்காயத்தை நல்லெண்ணெயில் பொரித்துச் சேர்க்கவேண்டும். மிக்க மலபந்தம் இருப்பவர்கள் ஆமணக்கெண்ணெயில் பொரித்துக் கொள்ளலாம்.)

எந்த உணவுப் பொருள்களை நீ அதிகம் விரும்புகிருயோ

அவற்றிஞல் அதிக பலத்தைத் திரட்ட முயற்சிக்கவும்!



விருப்பத்துடன் நீங்கள் சாப்பிடும் உணவுப்பொருள்களை அதிக ஊக்கந் தரக்கூடியவைகளாகச் செய்யுங்கள். நமக்குப் பிரியப்பட்ட சில உணவுப் பொருள்கள் அதிக நன்மை அளிப்பதில்லை என்று உங்களுக்குத் தெரியுமா? அவைகள் பசியைத் தணிக்கின்றன. ஆனல் சிறிது ஊக்க மட்டும் அளிக்கின்றன—தேவையான அளவு ஊக்கத்தைக் கொடுப்பதில்லை. இது ஒரு திடுக்கிடக்கூடிய யோசனைதான். ஆரோக்கியம், சந்தோஷம், திறமை—இவைகளெல்லாம் ஊக்கத்தை ஆதாரமாகக் கொண்டுள்ளன. சாப்பாடு நம் தேவைக்கு வேண்டிய ஊக்கத்தைக் கொடுக்காவிட்டால் ஏற்படும் தீமைகள் பல. எல்லா உணவுப் பொருள்களும் சிறிதளவு ஊக்கத்தை அளிக்கின்றன. ஆனல் தினசரி சாப்பிடும் சில உணவுப்பதார்த்தங்கள் சொல்ப ஊக்கமளிக்கக் கூடியவை. இம்மாதிரியான சாப்பாட்டுக்கு ஊக்கத்தைக் கொடுக்கவேண்டுமானல் அதிக ஊக்கமளிக்கக் கூடிய பதார்த்தங்களைச் சேர்க்கவேண்டும். வைடமின் நிறைந்த டால்டாவினல் சமைப்பது அனுகூலத்தைக் கொடுக்கிறது. இயற்கையளிக்கும் ஊக்கத்தைக்கொடுக்கக்கூடிய சத்துப் பொருள்களை டால்டா கொடுக்கிறது. எல்லா உணவுப்பதார்த்தங்களையும் டால்டாவினல் சமையல் செய்வது நலம்.

ஒவ்வொருவருக்கும் எந்தெந்த பதார்த்தங்கள் ஊக்கமளிக்கக் கூடியவை என்பதை அறிந்திருக்க வேண்டும். டால்டா "குக் புக்" (ஆங்கிலத்தில் மட்டும் எழுதியுள்ளது) உணவுப்பொருள்களின் தாராதரத்தைப் பற்றியும், 160 இந்திய ஆகாரத் திட்டங்களைப்பற்றியும்விவரித்திருக்கிறது. உங்களிடம் ஒரு பிரதி இருக்க வேண்டியதவசியம். Dept. C109 P.O. Box No. 353 Bombay என்ற விலாசத்திற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்புங்கள்

வைடமின் நிறைந்த **டால்டா** ஊக்கமளிக்கிறது.



மற்றொரு இந்திய ஞாபகார்த்த சிலை

மைசூர் சந்தன சோப்

குணத்திலும், மணத்திலும், மேம்பாட்டிலும் நிகரற்றது

எங்கும் கிடைக்கும்:

கவர்ண்மென்ட் சோப் பாக்டரி, பெங்களூர்

Edited & Published by K. S. Venkataramani at No. 34, Alamelu Mangapuram, Mylapore, Madras. Printed by T. V. Volaganatha Mudaliar,